Registered as a News Paper    பககங்கள் 10    விலை ரூபா: 6-00

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    மாசி 29    [12 - 3 - 1993]    வெள்ளிக்கிழமை    ஓசை 22

## தபால்கள் தொடர்ந்தும் உடைத்தனுப்பப்படுமாம்

வட மாகாணத்திற்கான வெளியூர் தபால் பொதிகள் தொடர்ச்சியாக உடைத்துப் பரிசோதிக்கப்பட்ட பின்னரே அனுப்பிவைக்கப்படுமென கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் பகிரங்கமாக அறிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது. அண்மையில் கொழும்பிற்கு உத்தியோகபூர்வமான பயணமொன்றை மேற்கொண்டு அங்கு தங்கியிருந்த யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் யாழ். குடாநாட்டிற்கான அத்தியாவசிய சேவைகள் சம்பந்தமாக. அங்கு நடைபெற்ற கூட்டம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கை பிரிக்குமாறு பாராளு. தெரிவுக்குழு சிபார்சு

## இடைக்கால அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக உருவாக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு நேற்று தனது இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்தது.

வடக்கு மாகாணமும், கிழக்கு மாகாணமும் நிரந்தரமாகத் தனித்தனியாகப் பிரிந்து தனி அலகுகளாகச் செயற்படவேண்டும் என அவ்வறிக்கையில் தெரிவுக்குழு சிபார்சு செய்துள்ளது.

இரு மாகாணங்களும் பிரிந்திருக்க வேண்டுமென சிபார்சு செய்துள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழு இரு மாகாணங்களுக்கும் இந்திய அரசியல் அமைப்பில் வழங்கப்பட்டுள்ளதுபோன்றகூடிய தன்னாட்சி வழங்கப்படவேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளது. எனினும் இந்தக் கூடிய தன்னாட்சி அதிகாரங்கள் எவை என்பதை அது தெளிவுபடுத்தியதாக இல்லை.

## தெரிவுக் குழுவின் சிபார்சு தமிழ் குழுக்கள் நிராகரிப்பு

### மாற்று அறிக்கை தயாரிக்க முயற்சி

(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக்குழு நேற்று வெளியிட்ட இடைக்கால அறிக்கையை கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் உடனடியாக நிராகரித்துவிட்டன. தொடர்ந்தும் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளில் பங்குபற்றுவதில்லை என அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

தீர்வுகுறித்து தமது சொந்த மாற்று அறிக்கையை தயாரிப்பதில் இக்குழுக்கள் தற்போது ஈடுபட்டுள்ளன.

இரு மாகாணங்களுக்கும் இந்திய அரசியல் அமைப்பிலான தன்னாட்சி வழங்கப்படும் என தெரிவுக்குழு குறிப்பிட்டுள்ளது குறித்து கருத்துத் தெரிவித்த தமிழ் எம் பியொருவர் இந்திய மாநிலங்

(10 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் கரங்கள் தமிழர் மத்தியில் பலப்படும்

### பி. பி. ஸி. விமர்சனம்

தெரிவுக் குழுவின் இடைக்கால அறிக்கை தனிநாடு கோரி போரிடும் புலிகளின் கரங்களையே பலப்படுத்தும் என பி. பி. ஸி கொழும்பு செய்தியாளர் கருத்து வெளியிட்டுள்ளார். வடக்கையும் கிழக்கையும் இணைத்து வைத்திருக்க தம்மால் மட்டுமே முடியும் என அவர்கள் வாதிடலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

19 மாதங்களாக 44 தடவைகள் கூடிய பாராளுமன்றத் தெரிவுக்குழு சிங்கள அரசியல் வாதிகளையே திருப்திப்படுத்துவதாக அமைந்துள்ளது. சிங்கள, தமிழ்அரசியல்வாதிகளையும் இக்குழு வெவ்வேறு திசையில் பிரித்துவிட்டது என்றும் பி. பி. ஸி. செய்தியாளர் கூறு

## கிளாலிக் கடலில் தாக்குதல்; ஓட்டி ஒருவர் பலி

கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் படகுகள் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஓட்டி ஒருவர் பலியானார்.

நேற்று இரவு கடற்படை பீரங்கிப் படகிலிருந்து கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது. இதில் உயிலங்குளம் மன்னாரைச் சேர்ந்த சீமான் (வயது 30) படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் அங்கு மரணமானார்.

இதேவேளை, கிளாலிக் கடல்பரப்பில் கடற் புலிகளுக்கும், கடற்படையினருக்கும் இடையில் பலத்த மோதல்கள் இடம்பெற்றதாகவும் சில செய்திகள் தெரிவிக்கின்றன.

## கட்டைக்காட்டு பகுதியில் புலிகள்-ராணுவம் மோதல்

கட்டைக்காட்டில் நேற்று இரவு விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையில் கடும்மோதல் நடைபெற்றதாகத் தெரியவருகின்றது. சுமார் நாற்பத்தைந்து நிமிடங்கள் வரை இம்மோதல் நடைபெற்றதாகவும் அறியவருகின்றது.

இம்மோதலைத்தொடர்ந்து கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, ஆனையிறவு முகாம்களில் இருந்து கடுமையான எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் 'பரா வெளிச்ச' குண்டுகள் அடிக்கடி ஏவப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

## வீர வணக்கம்



லெப். அற்புதன்

சுகவீனம் காரணமாக கடந்த 10ஆம் திகதி கடற்புலி போராளி ஒருவர் மரணமானார்.

மரணமடைந்த லெப்டினன்ட் அற்புதனுக்கு (பரமசிவம் பரமேஸ்வரன், சாம்பல் தீவு, திருக்கோணமலை) விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மீன்பிடி வலைகள் கடற்படையால் நாசம்

[வடமராட்சி]

சிறிலங்கா கடற்படையினரின் அட்டகாச நடவடிக்கையினால் மீனவர்களுக்குச் சொந்தமான 35 ஆயிரம்ரூபா பெறுமதியான பதினேழு மீன்பிடி வலைகள் துண்டு துண்டாக வெட்டப்பட்டு நாசமாகின.

நேற்றுக் காலை பருத்தித்துறை முனைக் கடற்பரப்பில் 7.30 மணியளவில் இரண்டு விசைப்படகுகளில் ரோந்து வந்த கடற்படையினர் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தி. இரத்தினம் (வயது24), சி. லோகசிங்கம் (வயது 23), கி. குணம் (வயது 23) ஆகியோரைப் பலமாகத் தாக்கிவிட்டு அவர்களது ஐந்துவலைகளை துண்டு துண்டுகளாக வெட்டி சேதப்படுத்தி விட்டு அவர்கள்பிடித்து வைத்திருந்த 3ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்களையும் கடலில் வீசி விட்டுச் சென்றனர்.

மற்றும் இன்னொரு படகில் சென்ற மூன்று மீன்வர்கள் ஒருவாறு கரையை வந்து சேர்ந்த போதிலும் அவர்களது பன்னிரண்டு மீன்பிடி வலைகளையும் கடற்படையினர் இனிமேல் பாவிக்க முடியாதவாறு வெட்டி நாசப்படுத்தி கடலில் வீசிவிட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (யோ)

## மூளை மலேரியா தீவிரமாக பரவுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மூளை மலேரியா நோய் விரைவாகப் பரவி வருவதாக மலேரிய தடுப்புச் சங்கம் அறிவித்துள்ளது.

கைதடிப் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவருக்கு இந்நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டைவிட இம்முறை இந்நோய் இரண்டு மடங்கால் அதிகரித்திருப்பதாக மேற்படி சங்க அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. வேகமாகப் பரவிவரும் இந்நோயை கட்டுப்படுத்த தவறும்பட்சத்தில் பல ஆயிரக் கணக்கானோர் இந்நோயினால் பீடிக்கப்படக் கூடிய அபாய சூழ்நிலை காணப்படுகிறது என வைத்திய வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இதேவேளை மேற்படி சங்கத்திற்கு 60 பக்கற் மலத்தியோன் மட்டுமே கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதனால் மலேரியா வேகமாகப் பரவிவரும் இடங்களில் மட்டுமே இவை தெளிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (நி)

## இன்று "வெளிச்சம்" வெளிவரும்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' பன்னிரண்டாவது இதழ் [பங்குனி மாத இதழ்) இன்று வெளிவருகின்றது. இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் அனைத்துலகப் பெண்கள் நாளை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு காடுகளில் பாரிய ராணுவ நடவடிக்கை

## விமானங்கள் தொடர்ந்து குண்டுவீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் தொப்பிகல காட்டுப்பகுதியில் புதிய இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. முகாம்களை விட்டு வெளியேறிய இராணுவத்தினருக்கு உதவியாக சிறிலங்கா விமானப்படை விமானங்களும், உலங்கு வானூர்திகளும் தாக்குதல் நடத்திவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொப்பிகல இராணுவ நடவடிக்கையில் சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த விசேட அதிரடிப் படைப் பிரிவு ஒன்றும், இரு காலாட் படைப் பிரிவுகளும் ஈடுபட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த இராணுவ நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டசென்றும், தொப்பிகலப் பகுதியில் குறிப்பிட்ட சில இடங்கள் மட்டும் தெரிவு செய்யப்பட்டு இராணுவ நடவடிக்கை இடம் பெறுவதாகவும் லெப். கேணல் பொஹரன் மேலும் தெரிவித்தார்.

இராணுவத்தினர் மட்டக்களப்பு புலி பாய்ந்த கல் இராணுவ முகாமிலிருந்து இரண்டு பவல் கவச வாகனங்கள், பதினொரு உழவு இயந்திரங்கள், பத்து தனியார் லொறிகள் சகிதம் வெளியேறி தரவை என்னும் இடத்தில் தரித்து நிற்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை கரடியனாறு முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் நவிண்டிலியமடு என்னும் இடத்திலும், கித்துள், உறுகாமம் ஆகிய முகாம்களிலிருந்து வெளியே

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**சுவடுகள்**

''இயல்வாணன்'' எழுதிய இந்த நாவலில்... மௌனங்களைப் பிளந்து ஒரு வார்த்தை வெடிக்கிறது இருளைக் கிழித்து ஒரு விடியல் பிறக்கிறது சூரியனைத் தேடி ஒரு சுதந்திரப்பூ மலர்கிறது....

(4449)

**விண்ணில் அல்ல விடிவெள்ளி**

''தாமரைச் செல்வி'' எழுதிய இந்த நாவலில்... சொந்த மாய் நிலம் வேண்டும், சொந்தமாய் மனை வேண்டும், இரண்டுமே இல்லாதவர்கள் இவர்கள் இரவல் மண்ணில் இடையி'றிப் பாடுபட்டு இன்னல்படுகின்ற இதயங்கள்

(4450)

**5.3.93 இல் சனி மாற்றம்**

14.4.93 இல் செவ்வாய் மாற்றம் 1.6.93 வரை வியாழ வக்கிரம் 1993-94 ஸ்ரீமுகபுது வருட பலன்களும் சத்யாவின் எண்ஜோதிடமும் ரூ 8/50 எங்கும் விற்பனையாகின்றன. குலசி ஸ்ரோர்ஸ், கல்வியங்காட்டுச்சந்தி.

(4452)

## அரசாங்க அறிவித்தல்

### மாணவ குடும்பநல சேவையாளருக்கான பரீட்சை- 1993

மாணவ குடும்பநலசேவையாளருக்கான பரீட்சை 21-03-1993 காலை 9.00 மணிக்கு சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனை, தெல்லிப்பழையில் நடைபெறும். எனவே இப்பரீட்சைக்கு குடும்பநல சேவையாளர் பயிற்சியை முடித்துக் கொண்ட மாணவ குடும்பநல சேவையாளர்கள் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வைத்திய கலாநிதி
பொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவைகள்
பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(சி/ 6181)

**மலேரியா நோயால் குழந்தை மரணம்**

(வடமராட்சி)

பருத்தித்துறை முனையில் மலேரியா நோய்க்கு இலக்காகி இருந்த ஒன்றரை வயது குழந்தை ஒன்று நேற்று முன்தினம் மரணமடைந்தது.

(யோ)

**பட்டமளிப்பும் பாராட்டும்**

கொக்குவில் - குளப்பிட்டி சிறிமங்கள மகா காளியம்மன் ஆலய அலங்காரத் திருவிழாக் காலத்தில் பதினைந்து நாள்கள் தேவி பாகவத தெய்வீகப் பேருரைகளை நிகழ்த்திய காரைநகர் கம்பன் கழக அமைப்பாளரும், யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியருமாகிய த. சிவகுமாரன் அவர்களுக்கு மேற்படி ஆலய நிர்வாகம் ''சொற்பெருஞ் செல்வன்'' என்னும் பட்டமளித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது.

திரு. ராஜநாயகம் தலைமையில் இடம்பெற்ற இவ் விழாவில், யாழ். செயலக உதவி ஆணையாளர் து. வைத்திலிங்கம் பொன்னாடை போர்த்தி சிவகுமாரனைக் கௌரவித்தார்.

## G A Q. 94

**பேராதனை** பல்கலைக் கழகம்

★ பல்கலைக் கழகத்தினால் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

A/L இல் 3பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

இதற்கான பல்கலைக் கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

இதற்கான

**விரிவுரைகள்**

ஆரம்பமாகிவிட்டன.

விபரங்களுக்கு:
S. அருள் நங்கை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி - யாழ்

(சி-6179)

## ஈராண்டு நிறைவில்.... நீங்காத நினைவுகள்

அன்னை மடியில் 1950 – 04 – 16



ஆண்டவன் அடியில் 1991 – 03 – 12

### திரு. இன்னாசிப்பிள்ளை அன்ரனிதாஸ்

ஆயிரம் பூமலர்ந்து மணம் பரப்பும்
ஆகாயமெல்லாம் வெள்ளிமின்னி அழகொளிக்கும்
ஆனாலுமென்ன எம்மனதில் ஆழ்ந்த நீயின்றி
ஆறுதல்தான் பெறுவோமோ இனி...

நினைவால் வாடிநிற்கும்
மனைவி, மகன், சகோதரிகள்'
மச்சாள்மார், மச்சான்மார், மாமி
உற்றார், உறவினர்கள்

19/8, மடம் தெற்குவீதி,
யாழ்ப்பாணம்

(சி-6177)

## நன்றி நவிலல்



தாயின் மடியில்
18-11-1961

ஈழமண்ணில்
17-02-1993

### செல்வி தயாவர்சினி கோமதி முத்துக்குமாரு

(B.A (Sp.) Dip. in Edn) ஆசிரியை
சிதம்பராக்கல்லூரி, வல்வெட்டித்துறை

18-02-93-ல் நடைபெற்ற எனது கனிஷ்ட புத்திரி செல்வி தயாவர்சினி கோமதி அவர்களின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் சிதம்பராக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் ஆசிரியைகள் மாணவர்கள் மற்றும சகல விதத்திலும் உதவி செய்தவர்கள் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள் அனைவருக்கும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

டாக்டர் மா. முத்துக்குமாரு
''பீப்பிள்ஸ் கிளினிக்''
கிருஷ்ணமூர்த்தி றோட்,
வல்வெட்டித்துறை.

(4071)

## அறிவித்தல்

புங்குடுதீவு - நயினாதீவு
ப. நோ. கூ. சங்கம் (வ - து)

சகல அங்கத்தவர்களுக்கும்:

பங்குப் பணம் ரூபா 100/– 6-3-92 இல் திருத்தி அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சட்டத்தின்படி உப விதி 18 (1) அமைவாக ஒரு பங்கின் பெறுமதி ரூபா 100/- ஆகும். எனவே சகல அங்கத்தவர்களும் தமது பங்கினை ரூபா 100/- ஆக வைத்திருக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள். தவறும் பட்சத்தில் கிளைக் குழுத் தேர்தலிலோ, பொதுச் சபையிலோ, நெறியாளர் குழுவிலோ பிரதிநிதித்துவம் வகிக்க முடியாது. எனவே, தங்கள் பங்குப் பணத்தை ரூபா 100/- ஆக ஆக்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:- தலைமைக் காரியாலயம் 201/1, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் காரியாலய நாட்களில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை பங்குப் பணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

செயலாளர் தலைவர்

[சி-6178]

## நினைவு கூருகின்றோம்...

## 1993-03-12

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை- கல்முனைப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்படுகையில் ஒரே சயனைற்றைப் பகிர்ந்து உட்கொண்டு வீரச்சாவெய்திய

**சுந்தர்** (நல்லதம்பி சுந்தரலிங்கம்-காரைதீவு-அம்பாறை)

**லெப். உமாராம்** (முத்துக்குமாரு சந்திரகுமார்- கல்லடி, மட்டு)

மட்டு- துறைநீலாவணைப் பகுதியைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

யாழ் வல்வெட்டித்துறைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக்குண்டுவீச்சிற் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்- பருத்தித்துறையிலிருந்து யாழ். நகரை நோக்கி நடைபெற்ற பொதுமக்கள் ஊர்வலம் ஒன்றின் மீது நல்லூர், முத்திரைச்சந்தைப் பகுதியில் வைத்து தேசவிரோதக் குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டிற் கொல்லப்பட்ட பெண் உட்பட 2 தமிழர்கள்-

1987 ஆம் ஆண்டு மன்னார்-வெள்ளாங்குளம் பாலியாற்றுப் பகுதியில் பயிற்சிக்கு வந்திருந்தபோது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த

**றோம்** (காளிக்குட்டி சந்திரன்-5-ம் கட்டை-மன்னார்)

1988 ஆம் ஆண்டு மட்டு-மண்முனைத்துறைப் பகுதியில் தேசவிரோதக்குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

**கடாபி** (க. பாலின்போடி- முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை-மட்டு)

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, பெரியபுல்லுமலைப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**2-ம் லெப். மாதவன்** (வடிவேல் தவராசா- மட்டக்களப்பு)

1991 ஆம் ஆண்டு தமிழீழ கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய

**மைக்கல்ராஜ்** (மட்டக்களப்பு)

**2-ம்லெப். சித்தா** (மன்னார்)

**கப்டன் தினேஸ்** (இராசதுரை ரவீந்திரமோகன்- ஐயனார் கோவிலடி, கற்கோவளம், பருத்தித்துறை)

**கப்டன் நிமலன்** (தங்கவேல் கலைச்செல்வன்- சின்னாவளை-பொலிகண்டி, வல்வெட்டித்துறை -யாழ்)

**ரெனோ** (தியாகராசா அன்ரன் லங்கநாதன்-முள்ளியான், வெற்றிலைக்கேணி - யாழ்)

**அறிவழகன்** (தேவதிரவியம் அல்பேட் புஸ்பராசா பலாலி வடக்கு-வசாவிளான்-யாழ்)

**சைனிஸ்** (முத்துக்கறுப்பன் குமரகுருபரன்-வியாபாரி மூலை, பருத்தித்துறை-யாழ்)

1992 ஆம் ஆண்டு யாழ்-திருநெல்வேலியில் எமது முகாமொன்றில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மின்சார விபத்தில் எமைப்பிரிந்த

**ஆண்டான்** (குமாரசாமி விஜயமனோகரன்- ஆலங்கேணி-பூநகரி, மன்னார்)

மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்புப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஏறாவூர் வாசியான தமிழ் இளைஞன்-

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6176)

யாழ்ப்பாணம்

# புலிகளின் தலைவரும் பிரேமதாசாவும்

“இலங்கைத்தீவின் அரசியலை ஆட்டிப்படைக்கும் இரு சக்திவாய்ந்த மனிதர்கள் இருக்கிறார்கள். ஒருவர் பிரபாகரன். மற்றவர் பிரேமதாசா. இருவரும் இரு வேறுபட்ட அரசியல் உலகங்களை பிரதிபலிக்கும் தலைவர்கள். இருவரிடமும் சில ஒருமைப்பாடுகளும், அதே சமயம் முரண்பாடுகளும் இருக்கத்தான் செய்கிறது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதென்பது இவர்கள் இருவரின் கையில்தான் தங்கியிருக்கிறது.”

இப்படியாக ஒரு வெளிநாட்டு அரசியல் விமர்சகர் இங்குள்ள அரசியல் எதார்த்தத்தைச் சித்திரிக்கிறார்.

இன்னொரு அரசியல் விமர்சகர் இன்னொரு பரிமாணத்தில் தமிழர் பிரச்சினையைப் பார்க்கிறார். பிரபல சிங்கள எழுத்தாளரான றோகன் குணரெட்னா சமீபத்தில் வெளியிட்ட தமது நூலின் (‘சிறிலங்காவில் இந்திய தலையீடு’) முடிவுரையில் கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார்.

“சிறிலங்காவிலும் சரி. இந்தியாவிலும் சரி ஆட்சிபீடம் ஏறும் எவரும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு முகம் கொடுத்துத்தான் ஆகவேண்டும் இராணுவ ரீதியாக போரில் நாம் வெற்றிகொள்ள முடியாது என்ற கசப்பான உண்மையை நாம் ஜீரணிக்க வேண்டும். ஆனால், அரசியல் ரீதியாக இப்போரில் நாம் வெற்றிகாண முடியும். ஒரு நியாயமான நிரந்தரமான சமாதானத்தை நிலைநாட்ட வேண்டிய பாரிய பொறுப்பு இன்றுசிறிலங்காவின் அதிகார பீடத்திலுள்ள பிரேமதாசாவைச் சார்ந்திருக்கிறது பிரபாகரனுடன் அரசியல பேச்சுக்களை நடத்தும் வாய்ப்பு என்றுமில்லாதபடி இப்பொழுது அவருக்கு ஏற்பட்டிருக்கிறது’...

“விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் ஒரு சமாதான உடன்பாட்டை செய்துகொள்வதென்பது எந்தவொரு தனிநபரோ, அரசியல் கட்சியோ, அரசாங்கமோ எதிர்கொள்ள வேண்டிய மிகக் கடினமான சவாலாகும். தற்போதைய நிலையில் இராணுவத் தீர்வு என்பது இதைவிட மிகவும் கடினமானதாகும். கடந்த நான்கு தசாப்தங்கள மாறிமாறி ஆட்சிக்கு வந்த சிங்களஅரசுகள் தமிழர் தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண மேற்கொண்ட முயற்சிகளை புறநோக்காக ஆராய்ந்து பார்த்தால் இப்பிரச்சினை மிகவும் சிக்கல் வாய்ந்ததுஎன்பது புலனாகும். இத்தகைய பாரிய முயற்சிகளின் பின்னரும், இன்றுவரை, தனிநபர்களும் சரி அமைப்புகளும் சரி இப்பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான ஒரு தீர்வைக்காண தவறிவிட்டன. மிகவும் சிக்கலான பிரச்சினைகளுக்கு இலகுவான தீர்வுகளைக் காணமுடியது.மதிநுட்பம், விடா முயற்சி, அரசியல் துணிவு,ராஜரீக விவேகம் ஆகிய பண்புகள்தான் ஒரு நிரந்தர தீர்வைக் காண்பதற்கு இன்றியமையாதவை. ஆனால் இத்தகைய பண்புகள் எமது சிங்களத் தலைவர்களிடம் காண்பது அரிது.”

“சிறிலங்கா அரசாங்கமும் சிங்கள அரசியல்உலகமும் தமிழர்களுடன் ஒரு சமரசமான அரசியல் உடன்பாட்டை செய்துகொள்வதில்தான் இந்திய - இலங்கை உறவுகளின் எதிர்காலம் தங்கியிருக்கிறது. நாம் விரும்பினாலும் விரும்பாத போதும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனே இலங்கைத் தமிழர்களின் உண்மையான தலைவராவர்.விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கியத்துவத்தை நாம நிராகரிக்க முடியாது. தமிழ்நாட்டின் ஆறுகோடி தமிழர்கள் இலங்கைத் தமிழர்கள் மீது கொண்டுள்ள தார்மீகஇரத்த உறவையும் வரலாற்றுப் பற்றுணர்வையும் பார்க்கும்போது விடுதலைப் புலிகள் அல்லது அவர்களது எதிர்கால வாரிசுகள் இறுதி இலங்கை உரவில் பிரதான பாத்திரத்தை வகிப்பார்கள் என்பது திண்ணம்”.

இந்த அரசியல் விமர்சனங்கள் சிங்களப் பேரினவாதத்திற்கும் உலகத்திற்கும் ஒரு செய்தியைச் சொல்கிறது. அழுத்தம் திருத்தமாக ஒரு உண்மையைச் சொல்கிறது. அதாவது தமிழ்த் தேசத்தின் தலைவர் பிரபாகரன் என்பதையும் அவரையும் அவரது இயக்கத்தையும் ஒதுக்கிவிட்டு தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண



முடியாது என்பதையும் தெட்டத்தெளிவாக எடுத்துச்சொல்கிறது. சிங்களப்பேரினவாதம் இந்த எதார்த்த உண்மையை ஜீரணிக்க மறுத்து வருவதால் தான் இந்த யுத்தம் முடிவில்லாமல் தொடர்கிறது. தமிழரின் தேசிய பிரச்சினை தீர்வில்லாமல் இழுபடுகிறது. சமாதானத்தின் கதவுகள்மூடப்பட்டுக் கிடக்கிறது.

தமிழீழ மக்களின் போராட்ட சக்தியாக எழுச்சிபெற்றுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உண்மையான வரலாற்றுப் பங்கை இந்தியா மறுதலித்தது. இந்த இமாலயதவறினால் தமிழர் பிரச்சினைக்கு இந்தியாவினால் தீர்வு காணமுடியவில்லை. இந்தக் குருட்டுத்தனமான அரசியல் போக்கைத்தான் பிரேமதாசா அரசு கடைப்பிடித்து வருகிறது. தமிழர் பிரச்சினையிலும், தமிழரின் தேசிய போராட்டத்திலும எவ்வித தொடர்புமின்றி. பங்குமின்றி அந்நியமாகி நிற்கும் தமிழ்க் குழுக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து விடுவதால் புலிகளின் முக்கியத்துவத்தை குறைத்து விடலாமென பிரேமதாசா எண்ணுகிறார் இந்தியாவும் இந்த மண்குதிரைகளை நம்பித்தான் அரசியல் ஆற்றில இறங்கி அவமானப்பட்டது. இது பிரேமதாசாவுக்கு தெரியாதது அல்ல. ஆனால் பிரேமதாசாவுக்கு எட்டப்பர்கள் தேவைப்படுகிறார்கள். வன்முறையைத் துறந்து சனநாயக நீரோட்டத்தில் தீக்ஷைபெற்ற புனிதவாளர்களாக இவர்களுக்கு புதுமுலாம் பூசிக்காட்டுவதன் மூலம் புலிகளின் ஆயுதப் போராட்டத்தை அர்த்தமற்ற பயங்கரவாதமாக சித்திரித்து புலிகள் இயக்கத்திற்கு களங்கம் ஏற்படுத்திவிடலாம் எனப் பிரேமதாசா நினைக்கிறார் போலும்.ஆனால்வன்னி எல்லையிலும், தீவகத்திலும், கிழக்கிலும் ஆயுதங்களைத் தாங்கி நின்று அரச படைகளுக்கு சேவகம் புரிந்து வரும் இந்தக் குழுக்களின் சனநாயக அரசியல் பற்றி இன்று உலகம் நன்கறியும்.

தமிழர் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைக்காணும் விடயத்தில் சிங்களத்தலைவர்களுக்கு துணிவும், ஆற்றலும், நேர்மையும், அரசியல் விவேகமும் இல்லையென றோகன் குணரெட்னா முன்வைக்கும் விமர்சனம் ஒரு உண்மையான கணிப்பு. பண்டாரநாயக்கா தொடக்கம் பிரேமதாசா வரை இந்த மதிப்பீடு பொருந்தும்.

சிங்கள அரசியல்வாதிதனது பதவி ஆசனத்தையே காதலிக்கிறான். இந்தப பதவியாசனம் சிங்கள -பௌத்த பேரினவாதத்தின் நன்கொடையாக அவனுக்குக் கிட்டுகிறது. ஆகவே அந்த இருக்கையில் நீடித்து இருப்பதென்றால் பேரினவாதத்திற்கு மண்டியிட்டு கிடக்கவேண்டும். ஜனாதிபதி என்ற அதியுயர் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் பிரேமதாசாவும் இதற்கு விதிவிலக்கானவர் அல்லர். தமிழருக்குகாருண்யம்காட்டி அவர் தமது பதவியாசனத்தை இழக்கத் தயாராக இல்லை. அதுவும் அடுத்த தேர்தலில் கண்ணாயிருக்கும் அவர், பேரினவாதத்திற்கு காவடி எடுப்பதில்தான் காலத்தை ஓட்டுகிறார்.

தலைவர் பிரபாகரன் சமாதானத்தின்கதவுகளை திறந்து வைத்திருக்கிறார்.போரைஒரு முடிவுக்கு கொண்டு வர தயாராக இருக்கிறார் பேச்சுவார்த்தைக்கு இணங்கியிருக்கிறார் அரசியல் தீர்வுக்குவழிகோலும் ஒரு யோசனையையும் தெரிவித்திருக்கிறார். இதற்கு மேலாக சிங்களதேசமும் உலகமும் அவரிடமிருந்து எதையும் எதிர்பார்க்க முடியாது.

பிரித்தானிய ஒலிபரப்பு நிறுவனம் (பி.பி.ஸி) என்றுமில்லாதவாறு ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறது இலங்கையின் அரசியலை ஆட்டிப்படைக்கும் இரு தலைவர்களையும் உலகத்தின் முன்னிலையில் நிறுத்தி விசாரணை செய்திருக்கிறது. பிரபாகரன் தனது நிலைப்பாட்டை நேர்மையாக தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார் அரசியல் தீர்வை நோக்கி நகரக்கூடிய ஒரு இடைவெளியையும காட்டியிருக்கிறார். ஆனால் பிரேமதாசா இழுவல் மெழியில் நழுவியிருக்கிறார் அரசியல்கண்ணாம்பூச்சிவிளையாடியிருக்கிறார். இந்த தலைவர்களதுநேர்மையையும், துணிவையும விவேகத்தையும் உலகம் எடைபோட்டுக் கொள்வதற்கு பி.பி.ஸி இப்படியான ஒரு கருத்து மேடையை அமைத்துக் கொடுத்தது பாராட்ட வேண்டிய விடயம்.

எந்த ஒரு பிரச்சினைக்கும் முகம் கொடுக்காமல் தட்டிக் கழிக்க விரும்பினால் ஒருவிசாரணைக்கமிஷன், அல்லது ஒரு சர்வகட்சி மாநாடு, அல்லது ஒரு வட்டமேசைக் கூட்டம் அல்லது ஒரு பாராளுமன்ற தெரிவுக் குழு - இப்படியாக எதையோ ஆரம்பித்து விட்டு அதனை முடிவில்லாமல் இழுத்தடிப்பது சிங்கள ஆட்சியாளரின் அரசியல் தந்திரோபாயம். பிரேமதாசாவும் இந்த சிங்கள அரசியல் மரபுக்கு அமைய அதேதந்திரோபாயத்தையே கடைப்பிடித்து வருகிறார் இரண்டு வருடத்திற்கு மேலாக சர்வகட்சி மாநாட்டிற்குள் ஒளிந்திருந்து, அது செயலிழந்து செத்துபபோக இப்பொழுது பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்குள் பதுங்கி நிற்கிறார். இருட்டிற்குள் கறுப்புப பூனையைத் தேடியவன்போல இந்தத்தெரிவுக்குழு இன்னமும் தமிழர் பிரச்சினையைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறது. பிரேமதாசாவோ அல்லது சிறீமாவோ அம்மையாரோ இன்னும் இந்தத் தெரிவுக் குழுவிடம் தமது தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதற்கு துணியவில்லை. இந்த இலட்சணத்தில் தெரிவுக் குழுவிடம் யோசனையை



சமர்ப்பிக்குமாறு தலைவர் பிரபாகரனுக்கு ஆலோசனை கூறுகிறார் பிரேமதாசா.

நாடு எப்படித்தான் சீரழிந்துபோனாலும் தனதுபதவி ஆசனத்தை கட்டிக்காக்க வேண்டும் என்பதுதான் பிரேமதாசாவின் இறைய அங்கலாய்ப்பு. புலிகளுடன் சமாதானம் செய்து கொள்வதோ சமரசப் பேச்சுக்களை நடத்துவதோ அல்லது பிரபாகரனின் ஆக்கபூர்வமான யோசனைக்கு அனுகூலமான பதிலைச்சொல்வதோ சிங்கள பேரினவாதத்தை சீண்டுவதாக முடியும். எனவே பிரேமதாசா இதுஒன்றையும்செய்யப்போவதில்லை. தெரிவுக் குழுவை சாகாமல் வைத்திருப்பதிலும் யுத்தத்தை தொடர்வதிலுமேஅவர் அக்கறை காட்டுவார். தமிழருக்குச்சார்பான தீர்வும்.சமாதானமும் அவரது ஆசனத்திற்குஆபத்தைதேடிக் கொடுத்து விடலாமென அவர் அஞ்சுகிறார்.

தலைவர் பிரபாகரனைப் பொறுத்தவரை தமிழர் தாயகம் அடிப்படையானது. அந்த அடிப்படையில்தான் தமிழர் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பது அவரது நிலைப்பாடு. அதன்படி தமிழர் தாயகத்தின் பூகோள முழுமையை அவர் வலியுறுத்துகிறார். இது இலங்கையின் நில ஒருமைப்பாட்டையும் பெரும்பான்மை சமூகத்தினரின் இறைமையையும், பௌத்தத்தின் முதன்மைப்பாட்டையும் இறுக்கமாக வலியுறுத்தி நிற்கும் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின் கீழ் சாத்தியமாகாது என்பது அவருக்குத் தெரியும் எனவேதான் அவர் சமஷ்டி ஆட்சி முறை முன்மொழியப்பட்டால் அதனைப் பரிசீலனை செய்யத் தயாராக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்.

சமீப காலமாக சமஷ்டி என்ற பதம் கொழும்பு அரசியல் அரங்கில் அடிபட்டு வருகிறது. யாழ்ப்பாணமக்கள்என்றும அறிந்திராதயாழ்ப்பாண எம்.பி. என்பவர்மூலம் அரசாங்கம் இந்தச் சொற்பதத்தை அறிமுகம் செய்திருந்தது. இந்தத் தனிமாகாண சமஷ்டி யோசனை வடக்கையும் கிழக்கையும் துண்டாடும் சதித்திட்டம் என அமைச்சர் தொண்டமான் தலைவர் பிரபாகரனுக்கு எழுதியிருக்கிறார். இந்தச் சதியை மூடிமறைத்து சமஷ்டித் தத்துவத்தின் மகிமை பற்றி பறைசாற்றிவந்த கொழும்பு அரசியல் உலகில் பிரபாகரன் போட்ட சமஷ்டிக் குண்டு எல்லோரையுமே திணறடித்துவிட்டது. அத்துடன் சிங்களப் பேரினவாதத்தின் முகமூடியையும் அது கிழித்து விட்டது. பிரேமதாசா தடுமாறி நொண்டிச்சாக்கு சொல்கிறார். அரசியல் அமைப்பை மாற்றியமைப்பது நடைமுறைச்சாத்தியம் அல்ல என்பதுபோல ஒப்பாரி வைக்கிறார்.

ஒற்றையாட்சியை மேலும். மேலும் இறுக்குவதற்காக சர்வசன வாக்கெடுப்பின்றி புதிய புதிய அரசியல் அமைப்புக்களையும் ஏராளமான திருத்தங்களையும், காலத்திற்குக் காலம் கொண்டுவந்த சிங்களப் பேரினவாதிகள் இன்று உலகத்தை ஏமாற்ற கட்டுக்கதைகள் புனைகிறார்கள்.

வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயக தன்னாட்சியை ஏற்றுக் கொள்ள சிங்கள பேரினவாதம் தயாராக இல்லை. இதனை தெளிவான வார்த்தைகளில் உலகத்திற்கு எடுத்துச் சொல்ல துணிவற்ற பிரேமதாசா, சொற்சிலம்பாடி சுற்றிவளைத்து மழுப்புகிறார்.

சிங்களத் தலைவர்களிடம் நேர்மையும் நெஞ்சுரமும் இல்லை என்பதற்கு பிரேமதாசாவின் இந்த மழுப்பல் ஒரு நல்ல உதாரணம்.

**பிரம்ஞானி**

## பூகம்பமாய் வெடித்தாய்

பூவாய் இருந்து
பூகம்பமாய் வெடித்தாய்!
நிலவாய் நின்று
நெருப்பாய் எரிந்தாய்!

சீறிய குண்டுகள்
குருதியாய் சிவந்ததே.
பாரிய கொடும்பகை
களத்தினில் சிதைந்ததே

களத்தினில் வீழ்ந்தாய்,
காவியம் படைத்தாய்
இகத்தினில் எம்முன்
உயர்ந்தோங்கி நின்றாய்

-எஸ். நித்தி

காஷ்மீரிய பிரச்சினையின் தீர்வுக்கு உரியவர்கள்
அங்கு வாழ்கின்ற மக்கள். அந்த மாநிலம்
எப்படி வாழ வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டியவர்கள்,
அந்த நிலத்தின் சொந்தக்காரரே தவிர
இந்தியாவின் ஏனைய மாநிலத்தவர்களில்லை.

அமானுல்லாகான், தலைவர். J. K. L. F.

# புதிய எல்லை ஒன்று வேண்டும்

காஷ்மீர் மக்களின் பிரச்சினை இன்று உலகத்திற்கு நன்கு பரிச்சயப்பட்ட பிரச்சினையாக மாறிவிட்டது. இந்திய இராணுவத்தினரின் வன்முறைகளும், அடக்குமுறைகளும், அரசின் கட்டுப்பாடுகளையும், செய்தித் தடைகளையும் மீறி உலகின் கவனத்தை இந்த நிலத்தின் மீது திருப்பி இருக்கிறது.

ஆனாலும், காஷ்மீரிய மக்களின் இந்தத் துயரம் நிறைந்த கதையை உலக ஆளும் வர்க்கம் இரக்கத்துடன் பார்க்கவில்லை. உலக நாடுகள் இரண்டு முகாமாக நின்ற பனிப் போர்க்காலத்தில் இந்தப் பிரச்சினையை ஒரு கோணத்தில் பார்த்தநாடுகள், பனிப் போர் முடிந்த தற்போதைய 'புதிய பொருளாதார உலக ஒழுங்கு' காலத்தில் வேறொருமாதிரிப் பார்க்கின்றன. ஆனால், எக்காலத்திலும் இந்த நாடுகள் தமது சுயநலத்தையே அடிப்படையாக வைத்தன.

தனது தேசத்தின் ஒரு பாதியை பாகிஸ்தானிட்மும், மறுபாதியை இந்தியாவிடமும் பறிகொடுத்துவிட்டு அடிமைகளாக வாழும் காஷ்மீர் மக்களின் நிலையிலிருந்து இந்தப் பிரச்சினையைப் பார்க்க எவருமே தயாராக இல்லை. இரத்தமும், கண்ணீரும் ஓடும் காஷ்மீரிய மக்களின் வாழ்க்கை இன்று, உலகின் சுயநலம் கலந்த வடிவத்தை வெளிப்படுத்திக் கொண்டு நிற்கின்றது.

காஷ்மீரிய பிரச்சினை இந்தியாவும், பாகிஸ்தானும் மத அடிப்படையில் இரு நாடாக பிரியும் போதே தோற்றங் கொண்டு விட்டது.

பெரும்பாலும் முஸ்லிம்களைக்கொண்ட காஷ்மீரின் மகாராசாவாக அந்த நேரத்தில் இந்து ஒருவரே இருந்தார். பெருமளவில் முஸ்லிம்களைக்கொண்ட மாநிலம் என்றவகையில் காஷ்மீர் பாகிஸ்தானுடன் சேருவதில் ஓரளவு நியாயமுமிருந்தது.. ஆனால் மகாராசா இந்து இராச்சியமான இந்தியாவுடன் காஷ்மீரை இணைத்தார்.

இதற்காகவே காத்திருந்த நேருவின் படைகள் காஷ்மீருக்குள்புகுந்தன. அதேநேரம், மன்னராட்சிக்குஎதிரானபோராட்டக்குழுக்களுடன் இணைந்து பாகிஸ்தானிய படைகள் காஷ்மீரிய நிலத்தின் மூன்றிலொரு பகுதிக்கு முன்னேறியிருந்தன.

அது தொடர்பாக 1948 இல் இந்திய பாகிஸ்தான் நாடுகளிடையே போர் ஒன்று நடந்து முடிந்தது. அந்நேரத்தில் புதிதாக இந்தப் பிரச்சினையில் தலையிட்ட ஐக்கிய நாடுகள் சபை காஷ்மீரிய மக்களுக்கு இரண்டு யோசனைகளைமட்டும் முன்வைத்தது.

அதாவது, காஷ்மீர், பாகிஸ்தானுடன் அல்லது இந்தியாவுடன் சேரவேண்டும் என்பதே ஆகும். ஆனால் காஷ்மீரின் பெருமளவு மக்கள் தனித்தே வாழ விரும்பினார்கள். இதில் துரோகம் என்னவென்றால் அந்த நிலத்தின் குடிகளின் கருத்தை மதிக்க ஐ. நா. சபை தயாராக இருக்கவில்லை.

ஐ. நா. வின் தீர்மானத்தை வலியுறுத்திய பாகிஸ்தான், தனிமனிதரான மகாராசாவை கருத்திலெடுக்காது, காஷ்மீரில்அந்த ம நிலம்எந்தநாட்டுடன் இணையவேண்டும் என சர்வசனவாக்கெடுப்பொன்றை நடத்தவேண்டும்என்ற கோரிக்கையை முன்வைத்தது. ஆனால், மறந்தும் காஷ்மீரியர்கள் தனித்து வாழ்வதற்காகவும் வாக்களிக்கலாம்என்ற பேச்சை பாகிஸ்தான் எடுக்கவில்லை,

காஷ்மீரியர்களுக்கும், பாகிஸ்தானுக்குமிடையில் கடைசி மதஅடிப்படையிலாவது ஒற்றுமையும்பிணைப்பும்இருந்தது இந்தியாவுக்கோமகாராசாஇந்துவாக இருக்கிறார் என்பதை தவிர வேறெந்த தொடர்பும் காஷ்மீருடன் இருக்கவில்லை; அத்தொடர்பும் மகாராசாவின் மரணத்துடன் அறுந்து போனது.

சர்வசன வாக்கெடுப்பில் காஷ்மீரியர்கள் பாகிஸ்தானுடன் சேருவதையே விரும்புவார்கள் என்பது இந்தியாவுக்கு நன்றாகவே தெரியும் இந்தியாவைப் பொறுத்தவரை அதன் பாதுகாப்புக்கு காஷ்மீர் மிக முக்கிய அமைவிடத்தில் உள்ளது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த நிலத்தை இலகுவில் இழக்க இந்தியா தயாராக இல்லை. அத்துடன் அப்பிள் தோட்டங்களாலும், உல்லாசப் பிரயாணிகளின் வருகையாலும் வருவாயை பெருமளவில் தரக்கூடியதாக காஷ்மீர் மாநிலம் உள்ளது. சர்வசனவாக்கெடுப்பு என்ற கோரிக்கையை இந்தியர்கள் கணக்கிலெடுக்கவே இல்லை.

எதுஎப்படியோ காஷ்மீரைப் பிளந்து கொண்டு நடுவாக ஓடிய கோடு ஒன்று இந்தியா, பாகிஸ்தான் என்ற இரு நாடுகளின்எல்லையாகியது. அன்று தொடக்கம் அதுவொரு கொதிக்கும் எரிமலை போன்ற நிலமாகவே இருக்கிறது.

காஷ்மீரை விடுவிப்பதற்காக பாகிஸ்தானும் (அப்படி எனில் தன்னோடு இணைப்பதாகவே கருத்து) காஷ்மீரைத் தக்க வைப்பதற்காக இந்தியாவும் எல்லையில் அடிக்கடி மோதிக்கொண்டன. ஆனால் இவற்றுக்கு வெளியே காஷ்மீர் மக்களின் நிலையோ வேறாக இருந்தது.

பாகிஸ்தான்பக்கமிருக்கின்ற காஷ்மீர் மக்களிற்கு பாக்குடன் தொடர்ந்து இருப்பதில் பெரிய பிரச்சினைகளிருக்கவில்லை. ஆனாலும்சகோதர காஷ்மீரர்களுடன் இணைந்து சுதந்திரமாக இருக்க வேண்டும் என்ற தாபம் இருக்கவே செய்தது.

இந்தியாவின் ஆளுகைக்குள் இருந்த காஷ்மீரில் பிரச்சினை வேறாக இருந்தது. ஆரம்பத்தில் சுமுகமாகவே இருந்த உறவுகள் முரண்பட்டன. காலப்போக்கில், 'இந்தி'ய ஆளும் வர்க்கத்தின் மேலாதிக்கத்தையும், தமது அடிமை நிலையையும் காஷ்மீர் மக்கள் உணர்ந்து கொண்டார்கள். அத்துடன் அங்கு மறைமுகமாக நடத்தப்பட்ட வேற்று மத அல்லது இன குடியேற்றங்களின் மூலம் அந்த நிலத்தின் தனித்துவம் சிதைக்கப்படுவதையும் அந்த மக்கள் புரிந்து கொண்டார்கள்.

ஆரம்பத்தில் இந்தியாவிற்குள் இருந்து கொண்டே தமது உரிமைகளை வென்றெடுத்து விட முடியும் என நம்பிய காஷ்மீரர்கள் அமைதிவழிப் போராட்டங்களை முன்னெடுத்தார்கள்.

இது இந்தியர்களுக்கு சினத்தைக் கொடுத்தது. காஷ்மீர் மக்களின் குரலை வெளித் தெரியாமல் அழித்து விடுவதற்கு இந்திய அரசு முயன்றது.

அடக்குமுறைகள் விரிவடைந்தன; உரிமைகளுக்காக குரல் கொடுப்பவர்களை பாகிஸ்தானிய ஊடுருவல்காரர்களாகப் பார்த்த இந்திய அரசு அவர்கள் மீது கடுமையாக நடந்து கொண்டது. ஆனால், இந்திய அரசின் அடக்குமுறை வடிவங்களால் காஷ்மீர் மக்களின் விடுதலை உணர்வை தட்டி எழுப்ப முடிந்ததே தவிர, அழிக்க முடியவில்லை.

இதில் வியப்பதற்கு எதுவுமே இல்லை. காஷ்மீரிய விடுதலைப் போராட்டத்தை அமைதி வழியிலிருந்து ஆயுத வடிவத்துக்குகொண்டுவந்தது இந்திய அரசின் வன்முறை வழியே ஆகும். காஷ்மீரியர் பக்கமிருந்து ஒரு வேட்டுச் சத்தம் கூட எழாத நிலையிலேயே ஏராளமான காஷ்மீரியர்கள் கொல்லப்பட்டு இருந்தார்கள்.

காஷ்மீரிய விடுதலை இயக்கங்களை ஆயுதமயப்படுத்தியதில் பெரும் பங்கு பாகிஸ்தானையே சேருகிறது. காஷ்மீர் தனிநாடாவதை பாகிஸ்தான் ஒரு போதும் விரும்பாது விடினும், இந்தியாவிற்குள் தொடர்ந்து ஓர் குழப்பத்தை உருவாக்கவும், முடிந்தால் காஷ்மீரைத் தன்னுடன் இணைத்துக் கொள்வதற்காவும் இத்தகைய உதவியை அளிக்கிறது. இதற்காக 'கிஸ்புல் முஜாகுதீன்' என்ற அமைப்பை பாகிஸ்தான் பெருமளவில் ஆதரிக்கின்றது.

ஆனால் பாகிஸ்தானின் உண்மை வடிவத்தை புரிந்து கொண்ட போராட்ட அமைப்புகள், தமது இரண்டாவது இலக்காக பாகிஸ்தானே இருக்கும் என்பதில் தெளிவாகஇருக்கிறார்கள்.

இந்தியர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட 'ஜம்மு-காஷ்மீர்' மாநிலம் இன்று போர்ப் பூமியாக மாறிவிட்டது. தம்மை இறுகப்பற்றிக்கொண்ட போர்க்கால வாழ்க்கைக்கு மக்கள் பழக்கப்பட்டுவிட்டார்கள். அந்த மாநிலத்தின் மூலை முடுக்கு எல்லாம் விடுதலைப் போராட்டம் பரவிவிட்டது. 'இந்திய நாயே வெளியேபோ' என்ற கோஷத்தைக் கேட்டுக் கேட்டு இந்தியச் சிப்பாய்களுக்கே வெறுத்துப் போய்விட்டது.

'விடுதலைக்காக போராடு, புனித போர்க்கீதம் பாடு, எதிரிகளைக் கொல்லு அல்லதுமடிந்துபோ' என்ற போர்ப்பாடல் அந்தப்பள்ளத்தாக்கின் தேசிய கீதமாக மாறிவிட்டது ஆனாலும் இந்திய அரசின் கொடுங் கரங்கள் தன் இரும்புப்பிடியை அந்தத் தேசத்திலிருந்து தளர்த்தத் தயாராக இல்லை.

இனப்படுகொலைகளும், கைதுகளும், சித்திரவதைகளும் மலிந்து, மனித உரிமை மீறல் உச்சக்கட்டத்தை அடைந்து விட்ட காஷ்மீர் இன்றுதுயரத்தில் ஆழ்ந்து போய் உள்ளது.

காஷ்மீர் பள்ளத்தாக்கின் இந்த இரத்தந்தோய்ந்த கதையை, மனித உரிமைகளை போற்றுபவர்களென்றும், நாகரீக உலகின் முன்னோடிகள் என்றும் சொல்லிக்கொள்ளும் முன்னேறிய நாடுகள் பார்க்கும் பார்வையை பார்ப்போம்.

பனிப்போர் முடிந்த இன்றைய புதிய பொருளாதார உலக ஒழுங்கில் இந்தியா உலகின் முக்கியத்துவம் நிறைந்த நாடாக மாறி உள்ளது.

தங்கள் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்தக் கூடிய மிகப்பெரிய சந்தை ஒன்றை இழப்பதற்த முன்னேறிய நாடுகள் எதுவுமே தயாராக இல்லை. ஆகவே காஷ்மீர் தொடர்பான விடயத்தில் இந்திய அரசிற்கு சார்பான நிலையிலேயே இந்த நாடுகள் இருக்கின்றன. என்றும் போலவே இன்றும் ஒடுக்கப்பட்ட இந்த மக்களின் குரலால் இரும்புஇதயங்களை அசைக்க முடியவில்லை.

சோவியத்துடனான பனிப்போர் காலத்தில் பாகிஸ்தானின் சார்பாக நின்று. காஷ்மீரில் அந்த மக்கள் எந்த நாட்டுடன் இணைய வேண்டும் என்பதை சர்வஜனவாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கவேண்டும் என கேட்டுக் கொண்ட அமெரிக்கா இன்று, காஷ்மீரில் பயங்கரவாதத்தைப் பாகிஸ்தான் ஊக்கப்படுத்தக் கூடாதென்றும், அப்படித் தொடர்ந்து செய்தால் பாகிஸ்தானைப் பயங்கரவாத நாடாகப் பிரகடனப்படுத்த வேண்டி வரும் எனவும் எச்சரிக்கிறது.

இதைவிடப் பல்வேறு பிரச்சினைகள் (அணுகுண்டுத் தயாரிப்பு தொடர்பாக) அமெரிக்காவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையில் தோன்றி உள்ளது. அமெரிக்கா இந்தியாவுடன் தனது நெருக்கத்தை அதிகரித்திருப்பது வெளிப்படையானது. வருங்காலத்தில் தனது கணனி, மற்றும் மின்னணுவியல் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தக் கூடிய வாய்ப்பை இந்தியாவிடமிருந்து அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

சோவியத் கூட்டமைப்பை உதறிவிட்டு இன்று தனித்து நிற்கும் ரஷ்யா பெருமளவில் இந்தியாவின் பக்கமாகவே சாய்ந்து நிற்கிறது. பாகிஸ்தானுடன் நட்புறவை விரும்பினாலும் இந்தியாவை இழக்க ரஷ்யா தயாராக இல்லை. இதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. இந்திய விற்பனைச் சந்தையின் பெறுமதி ரஷ்யாவிற்கு நன்றாகவே தெரியும். அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் செய்த ஜேர்மன் அதிபர் கெல்மட் கோலும் இவற்றிலிருந்து விலகிச் செல்லவில்லை.

விமர்சனங்களும், பார்வைகளும் எப்படியும் இருக்கட்டும்; ஆனால் ஒரு விடயத்தில் மட்டும் இந்த நாடுகள் அனைத்தும் ஒற்றுமைப்படுகின்றன. அது என்னவெனில், காஷ்மீரியப் பிரச்சினையை இந்திய-பாகிஸ்தான் அரசுகள் பேசித் தீர்க்க வேண்டும் என இவை அனைத்தும் வலியுறுத்துகின்றன.

இதுவொன்றும் அதிசயமானதல்ல; நேர்மையானதும் அல்ல உலகின் போக்கு இப்படித்தான் இருக்கிறது. அதனால்தான் ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவும் - இலங்கையும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதும், இந்த உலகநாடுகள் அனைத்தும் நான் முந்தி, நீ முந்தி எனப் போட்டி போட்டுக் கொண்டு பாராட்டைத் தெரிவித்தன. ஆனால் இங்கு பிரச்சினைக்குரிய தமிழர்கள் எவராலுமே கணக்கிலெடுக்கப்படவில்லை.

காஷ்மீரைப் பொறுத்தும் இதுதான் நடக்கிறது. நண்பன் மாதிரி நடிக்கும் பாகிஸ்தானோ அல்லது இந்தியாவோ, அமெரிக்காவோ, ரஷ்யாவோ காஷ்மீரின் நலன்களைக் கருத்தில் எடுக்கத் தயாராக இல்லை. இந்த நாடுகள் அனைத்திற்கும் தனது நலனே முக்கியமானதாகப்படுகிறது.

இன்றைய காஷ்மீர் இப்படிப்பட்ட சிக்கலுக்குள் தான் நிற்கிறது. எது எப்படியோ, இந்திய நாட்டின் கீழ் நடந்தவற்றை எல்லாம் மறந்து வாழ்வதற்கு காஷ்மீர் மக்கள் இனி ஒருபோதும் சிந்திக்க முடியாதளவிற்கு சம்பவங்கள் நடந்து முடிந்து விட்டன.

என்றோ ஒருநாள் காஷ்மீரின் குறுக்காக ஓடும் எல்லைக் கோடு தகர்க்கப்பட்டு, காஷ்மீரைச் சுற்றி புதுஎல்லை ஒன்று பிறக்க வேண்டும் எனக்காஷ்மீரிகள் விரும்புகிறார்கள். அதற்காக அவர்கள் போராடுகிறார்கள்.

**குலோத்துங்கன்**

## இலக்கு

காவலரணில் விழித்திருக்கும் பொழுதுகளில்
நிகழும் ஒவ்வொரு சாவும் - அவனது
சாவையும் உறுதிப் படுத்தும் - ஆனாலும் அவன்
நிமிர்ந்து தேசத்தை காப்பதையே - இலக்காக
கொண்டு நிற்பான்.
இரவில், இருள் சூழ்ந்த அமைதியில்
வீடும், நிலவு மேயும் முற்றமும், அம்மாவின்
அரவணைப்பும்
அவன் இதயத்தை வாட்டும் - ஆனாலும் அவன்
நிமிர்ந்து ... ...
நிலவில, பனி பெய்யும் குளிரில்
கட்டிலும், மெத்தையும், ஒட்டியபடியே படுக்கும்
தம்பியின் நினைவும், நெஞ்சத்தை வருடும்-
ஆனாலும் அவன்
நிமிர்ந்து ..
வெட்டை வெளியில் வெய்யில் வாட்டும்
கிராமத்து நினைவும். நிழலுக்கு ஒதுங்கும்
வற்றாப்பளை கோயில் ஆலமரமும - புழுப்பொதிந்த
சிவைச் சிவப்புப் பழங்களும் - நெஞ்சுக்குள்
வந்து நிறையும் - ஆனாலும் அவன்
நிமிர்ந்து...
வானில ஊர்திகள் உறுமும் - குண்டு மழை
பொழியும். முன்னாலில் இயந்திரங்கள் வரும்,
இரவை மழை பொழியும் - சாவு
நிச்சயமாகி... ஆனாலும் அவன்
நிமிர்ந்து தேசத்தை காப்பதையே இலக்காக
கொண்டு நிற்பான்.

சி. ஜெயவதனா
முள்ளியவளை.

## சிறுகதை

# தவம்

சரியைத் தொண்டு செய்து முத்தியடையிற முயற்சியிலை இறங்கினவன் மாதிரி ஆனந்தன் வந்த வரக்கிடையிலை தும்புத்தடியும் கையுமாய்க் கூட்டிக் கொண்டிருந்தான். இரண்டு மாசத்திற்குப் பிறகு ஆனந்தனின்ர காலடி அந்த வீட்டுக்க படுகிது. ஆனந்தன் மட்டுமெண்டுஏன் பொய் சொல்லுவான். மனிசன்ரை காலடியே இண்டைக்குத்தான் கனகாலத்துக்கு பிறகு படுகுது எண்டால் பாாத்துக் கொள்ளுங்கோவன்.

ஆனந்தன் நிதானமாய் திறப்பையெடுத்து முன் கதவின்ரை பூட்டுக்கை போட்டு ரெண்டு எஃகு எஃகினான். விறாந்தைக்கு வந்தான். தூசி தூசியள் படை படையாய் அடிபிப் போய்க் கிடந்திது. தூசிகளை அவனுக்குபிடிக்கிறதேயில்லை. கொஞ்ச நேரம் தூசிக்கை நிண்டல் காணும் ''கம், கம்'' மெண்டு தும்மத் தொடங்கிடுவான் அறையைத் திறந்து கொண்டுவந்தபையை கட்டில்ல போட்டான். சாறத்தை உடுத்தபடியே விறாந்தையை நோட்டம்விட்டான். அவன் உள்ளுக்கை வந்த பாதைவரிசையாய் தெரிஞ்சுது அவனுக்குதூசியளைப் பார்க்க வந்த எரிச்சலிலை தும்புத்தடியைத் தூக்கிவிறுவிறெண்டு கூட்டத் தொடங்கினான். படைபடையாய் வெங்காயத் தோலுரியிறதைப்போல தூசியு' வந்து கொண்டிருந்திது. பெருவிரலாலை கீறிபபார்த்தான். கோடு கோடாய் கோலம் போட்ட மாதிரியிருந்தது. எத்தினை தரம் கூட்டினாலும் அதுகள் போறமாதிரியில்லை. ''தூசியள்ளை இருந்துதானாம் உலகம் வந்தது'' படிச்ச ஞாபகம் வரவே அதுகள் மேலை ஒருவித மதிப்பு வந்திடும் போலிருந்தது. ''இதுகளுக்கு மட்டும் மனிசர் இல்லாத வீடுகளில எவ்வளவு கவனம்'' வாய்க்குள் முணுமுணுத்தபடி வேகத்தோடை கூட்டினான்.

அநேகமான வீடுகளைப் போல அந்த வீட்டுக்கும் முத்தம் இல்லாமல் இல்லை. அதிஷ்ட வசமாய் நல்லாய் ஓடியாடி விளையாடக் கூடிய பெரிய முத்தம் அந்த வீட்டுக்கிருந்தது. முத்தத்தின்ரை மூண்டு பக்கத்திலும் பூக்கண்டுகள். செவ்வரத்தை, நித்திய கல்யாணி, நந்தியாவெட்டை, பொன்னொச்சி இதுகள் ஒண்டையும் இங்க காண ஏலாது. ஆக மல்லிகை மட்டும்; ஒரு கொடி; கொத்துக்கொத்தாய் வெள்ளையாய் குழந்தைப் பிள்ளை சிரிக்கிற மாதிரிப் பூக்கும். மல்லிகைப் பூவெண்டால் ஆனந்தனுக்கும் கொள்ளை ஆசைதான், மிச்சமெல்லாம் குரோட்டனுகள். அதுகளும் ஒரு வித்தியாசமான வடிவுதான். என்ன இருந்தாலும் பூப்பூவாய் பூத்துச் சொரியிற தன்ரை வீட்டிலை நிக்கேக்கை வாற சுகம் இங்கையில்லையெண்ட ஏக்கம் அவன்ரை மனசிலை அடிக்கடி வாறதென்னவோ உண்மைதான்.

வீடு எண்டாப் போல சும்மாய் சின்ன வீடில்லை பெரிய வீடு ''எத்தினைஅறைவரும்'' ஆனந்தன் எண்ணிப் பார்த்தான். ஒன்பது தான் வந்திது. ''இல்லையில்லை கூடவரும்'' அவ்வளவு பெரிசு. கதவைத் திறந்த உடனையும் பெரியொரு விறாந்தை. அதை அப்பிடிச் சொல்லறதை விட ஹோல் (Hall)எண்டாத்தான் பொருந்தும் அப்பிடிச்சொல்ல அதுக்கும் எல்லாப் பொருத்தமும் இருக்குது. இரண்டு மூண்டு சோக்கேசுகள் அது நிறைய விளையாட்டு விளையாட்டுச்சாமான்கள் கொலுப் பொம்மையள் ஒரு சோக்கேசுக்குள்ளையும் வெளியேயும். இப்படியொரு ஹோலிலை என்னவெல்லாம் இருக்க வேணுமோ அதெல்லாம் நிறைஞ்சு இருந்திது. ஆனால் மனிசர் மட்டும் இல்லை. அந்தக் கோலின்ரை வலதுஇடது பக்கங்களில ரெண்டு அறையள் அதில வலதில தான் ஆனந்தன்.

'ஏன் ஆக்கள் இவ்வளவு பெரிய வீடு கட்டுறவையள்? இவ்வளவு வசதியளையும்வீட்டிட்டு ஏன் ஓடுகினம்''யோசிச்சுப் பார்த்தான். மன சுபாரமாக...பாரமற்ற தூசியை இறுக்கி இறுக்கி கூட்டித்தள்ளினான்.

ஆனந்தன் பேருக்கேற்றவன் சிரிச்ச முகம் கொஞ்சம் எழும்பின தோற்றம். சுருள் தலை முடியில்லாட்டிலும் அப்பிடித் தோற்றம் ஒடுக்கிற தலைவெட்டு. படிக்கவெண்டு வந்தாப்பிறகு இஞ்சை கொஞ்சம் மெலிஞ்சு போனான். தாயின்ரை சாப்பாடு மாதிரி வருமோ. என்னத்தைத்தான் கடையிலை சாப்பிட்டாலும் ஒரு நாளும் ஆனந்தனுக்கு வீட்டுச் சாப்பாட்டைப்போல் அதுகள் பத்தியப்படுறேல்லை அவன்ரை கிராமத்திலஇப்பிடி வீட்டை விட்டுட்டு ஒருதரும் ஓடுறேல்லை. எங்கையாவது ஒராள் இரண்டுபேர்! அதுவும் தொழில் தேடிப் போய் உழைச்சுப்போட்டு வந்துவந்து போவினம். இஞ்சை இந்த வீடுகளை மனிசரே இல்லாத வீடுகளைப் பார்க்க அவனுக்கு பத்திக் கொண்டு வரும்,

இரண்டு வருசமாய் வீடு பூட்டியிருக்கு எப்பிடியிருக்கும் உள்ளுக்கை'' ஆனந்தன் நடு ஜன்னலைத் திறந்தான். தூசி இருட்டு மணம் உள்ளுக்கை இதுகளின்ரை கலவையாய் ஒரு சோகமான அமைதி.சுடலையில இருக்கிற அமைதி. ஆன்மாசெத்துப் போன மனசில நம்பிக்கையேயற்று வாழ்க்கையை எதிர்நோக்குற ஒரு மனிசன்ரை முகத்தை பார்க்கிறது போலிருந்தது அந்தரமான அந்த அமைதி அவனுக்கு அரியண்டத்தைக் கொடுத்திது. அப்பிடியே அந்த மோனத்திலே இலயிச்சுப் போய்விட விரும்பினான் திடீரெண்டு இரண்டு மூண்டு குருட்டு வெளவாலுகள் அந்த மோன நிலையைக் கலைக்க வெண்டேகடவுளாலை அனுப்பப்பட்டவை மாதிரி சாமியறைக்குள்ளாலை வெளிக்கிட்டு சிறகடித்துப் பறந்தன.

''தம்பி ஆனந்தன் எப்ப ஊராலை வந்தனீர்''பக்கத்து வீட்டு மாசிலாமணி மாமா. இப்பத்தான் எண்டபடி திரும்பி நிமிர்ந்தான். அவர் தூரப்போவது தெரிஞ்சுது. கோவிலுக்குக் கூட மிசின் மாதிரி வேகமாய் போறஅவருக்கு அவனை விட முருகன்ரை நலனுகள்ல தான் எவ்வளவு அக்கறை. மனிசர் மாதிரி சிரிச்சுக் கதைக்க எப்பிடி மனம் வரும்; பிள்ளையளுமெல்லாம் அங்கையிஞ்சை போனாப்பிறகு அந்தாளும் என்ன செய்யிறது.

''வெளவாலுகளுக்கு ஒளியைப்பிடிக்காதாம்'' பிறகேன் அதுகளை கஸ்ரப் படுத்த வேணும். ஜன்னலை அடிச்சு மூடினான்மனிசரெண்டுசொல்லுகில் அவைக்கு வீடுவேணும் வீடு எண்டு சொல்லுகில் அதுகளுக்குமனிசர் வேண்டாமோ.

''வீடு ஒத்த சொல் சொல்லுங்கோ ''மூண்டாம் வகுப்பிலை சின்னத்தம்பி வாத்தியார் ''இல்லம் இது கட்டையன் நந்திசொல்லு'' 'பதி'' ''ஆனந்தன்'' வாத்தியாரின் குரல் பென்சிலால் வீடு கீறிக் கொண்டிருந்த ஆனந்தனிட்டை வந்திது. சிறிதும் தயக்கமில்லாமல் ''வளவு'' எண்டான் வகுப்பே கொல்லெண்டு சிரிச்சுது. கணப் பொழுதில மூளையில பொறி தட்ட ''உறையுள்உறையுள்'' என்று கத்தினான். அக்கா பாடமாக்கேக்கை பக்கத்திலிருந்தது அந்தரத்துக்கு உதவிச்சு ''ஓமோம் உயிர்கள் உறையிறதால வீட்டை உறையுள் எண்டும் சொல்லலாம்'' வாத்தியார்சொன்னது காதில கணீரென்று ஒலிச்சுது விறாந்தையைக் கூட்டி படியளில விழுத்திப் போட்டு நிமிர்ந்தவனுக்கு வெள்ளை பிளாஸ்ரிகில கறுப்பெழுத்தில 'தாஜ்மகால்' கண்ணுக்கை குத்திச்சு. தாஜ்மகால் சலவைக்கல்லால் ஆன பளிங்கு மாளிகை உலக அதிசயம்.ரீவியில பார்த்திட்டு தங்கச்சியோடை அடிபட்டதை நினைக்க சிரிப்பு வந்திது ஆனந்தனுக்கு. ''ஆக்களை எரிச்சாலதாட்டால் அது சுடலைதான். உதுமும்தாஜுக்காக சாஜகான் கட்டின சுடலை. நீ வேணுமெண்டால் மயானம் எண்டும் சொல்லலாம் அப்ப இந்த வீடும் ஒரு சுடலையோ! ஐ.பி.கே எப் காரங்கள் 89இலை இந்த வீட்டிலை இருந்தவங்களாம். அவங்கள் எங்கையிருந்தாலும் அந்த இடங்களை யெல்லாம் சுடலையாக்கினவங்கள்தானே எங்கடை சனத்தை அடிச்சும் சுட்டும் தாட்டவங்களெல்லே அம்மா தங்கச்சிக்கு அடிக்கடி சொல்லுறது. காதில கேட்டிது ''பிள்ளை சனசந்தடியிலலாமல் காடு. மண்டி சுடலை மாதிரிக்கிடக்கு அந்த றோட்டாலைபோறன் எண்டு நிக்கிறாய் அதுவுமிந்த கருக்கலுக்கை''... மனிசர் இல்லாமல் காடுமண்டிப் போய் இந்த வயலிலே எத்தனை வீடுகள் இந்த தாஜ்மகாலைப் போல மனித ஆசாட்டமே இல்லாமல் அந்தரமான சோகத்திலை இல்லையில்லை மௌனமான ஒரு மோனத்திலை இலயித்திருக்கின்றன. இந்த வீடுகள் எல்லாம் என்ன வரம்வேண்டி இப்பிடி சோகத்திலை மௌனமாய் தவமிருக்கின்றன.

ஃ ஃ ஃ

விறாந்தையைக் கூட்டிப் போட்டு விளக்கு மாத்தோட முத்தத்திலை இறங்கினான். ஆனந்தன் முத்தம் முழுக்க சப்பி நெல்லு காத்துக்குப் பரவுண்ட மாதிரி அப்பிப் போய்க் கிடந்த பெருநெல்லி மரச்சருகு காலுக்கு இதமாய் இருக்கவே நெல்லியோடை சாய்ந்தபடி தாஜ்மகாலைப் பார்த்தான். மனம் மௌனத்தில மௌனமாய் கிறங்கிப் போச்சு. எத்தினை வடிவான வீடுஎவ்வளவுபெரியவசதியான வீடு.ஏன்இதைவிட்டிட்டுஓடிப் போயிருப்பினம். மேலும் மேலும் ஆழமாய்ப் பார்த்தான். மனமும் உடலும்அந்த மோன நிலையோடை ஒட்டிப் போக ஆடாமல் அசையாமல் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

ஃ ஃ ஃ

மௌனம் ஒரு மொழியோ? ''மொழியெண்டால் என்ன''? தொடர்பு கொள்ளலுக்கான ஊடகம்'' அப்பிடித்தானே படிச்சிருப்பியள் உங்கடை மொழிக்கு ஒரு வடிவம் ஓசை இருக்கும் இல்லையே? காற்று உங்களோடை பேசல்லையோ? அப்பிடியெண்டால் என்னென்று தென்றலென்றும் புயலென்றும் சொல்லுவியள்! காலை நனைக்கிற கடல் அலை உங்களை மெய்சிலிர்க்க வைக்கல்லையோ அதுமாதிரி தான் எனக்கும் மௌனம் ஒரு மொழி. மொழி தான் எனக்குள்ளை இருக்கிற ஏக்கத்தை அதுகின்ரை கொடுமையை ஓசையள்ளை வெறும் வார்த்தைகளில அதுகின்ரை அலகுகளிலைசொல்லேலாமல் தான் நான் மௌனத்தை மொழியாக்கி மோனத்திலே இருக்கிறன்.என்ரைமொழியை மௌன மொழியை உங்கடை உங்கடை இதயத்தாலகேளுங்கோ! இதயத்தாலை படியுங்கோ!...

நீங்கள் அழேக்கை, அழுது சிரிக்கேக்கை சிரிச்சுஉங்களைப் போல வாழ்ந்த அந்தக்காலம் எப்பிடி மறைஞ்சு போகும் ஒரு பனித்துளியைப் போல! இப்ப நீங்கள் அப்பாவாகி அம்மாவாகி எங்கோ தொலை தூரத்திலை உங்கடை பிள்ளையளைப் பொத்திப் பொத்திபாதுகாப்பியள். அதைப் போலத்தான் நானும் உங்களை ஒரு தாய் மாதிரி எத்தனை கவனமாய் எனக்குள்ளை உள்ளடக்கினன். எத்தகைய பிணைப்பு நீங்கள் கூட்டித் துடைச்சு கழுவி அலங்கரிச்சு மகிழ்ந்த நான் இப்ப மௌனமாய் தூசியளை துணைக்கழைச்சு! இது எப்படி நிகழ்ந்து போச்சுது! இருந்தாலும் நிஸ்டையில இருக்கிற ஞானியைப்போல நான் இன்னும் மௌனமாய் மனிசருக்காய்... யுக யுகாந்திர காலத்துக்கும் நான் நேயம்மிக்க மனிசர்களுக்காய் இப்படியே தவத்திலை மூழ்கி!... காத்திருப்பன்

எனக்கு அம்பலவாணரை நினைச்சால் இப்ப கூடமனசு மகிழ்ச்சியிலை மிதக்கும். அந்த மனிசன்ரை உழைப்பை நினைச்சால் மெய்சிலிர்க்கும், அந்தாள் இந்த மண்ணுக்குள்ளாலை நான் எழும்பிச்சு. முன் வீட்டைப்போல ரெண்டு அறையோட இருந்த என்னை மாடியாக்க அந்தக்கிழவன் மாடாய் உழைச்சுது. எழுபது வயதிலையும் என்னை எப்பிடிப் பார்க்கும். அங்கைதுடைச்சு இஞ்சை கழுவியெண்டு எத்தினைநேசம் அந்த மனிசனுக்கு ஒவ்வொரு நாளும் விடியக்காலையிலை முத்தத்தைக் கூட்டிப்போட்டு அப்பிடியே அந்த மூலை வேம்புக்கை நிண்டு ஒரு சுருட்டு பத்தாட்டிவெளிக்குக் கூட ஒழுங்காய் போகாது தெரியுமே!...

சண்முகநாதன் இருக்கிறா ரெல்லே! அவர்தான் அம்பலவாணற்ரை மூத்தவர் அவரைப் போலவே மூக்கு நீண்ட முன்வழுக்கை மனிசன் பாவம் அந்தாள் பிள்ளையளும் அங்கேயிஞ்சை போக மனிசியோட தனிச்சுப்போச்சு. அவையையும் வரச்சொல்லி எத்தனை கஷ்ரப் படுத்திச்சினம். கடைசியிலை மனிசிக்காரி தான் பேசப்போறன் பிள்ளையளிட்டை நீங்கள் என்னெண்டாலும் செய்யுங்கோ எண்டு காவடி தூக்கிப் போட்டுது. கொஞ்சநாளையிலை அவரும் போய்ட்டார். பிள்ளையளிட்டையில்லை. அவர்கும்பிட்ட பெருமாளிட்டை

அதில இருந்து எனக்குத் தனிமைதான் அப்பிடி பொய் சொல்லுறதும் நல்லதில்லை! வெளவாலும் தூசியும் துணையாய் இருக்கினம் தானே!

''முன் வீட்டைப் பாருங்கோ''இரண்டு அறையளோடைசேர்ந்த சின்னக் குசினி. அந்தக் குசினிக்கை எந்தநேரமும் நெருப்பு எரிஞ்சபடிதான். மனுசியைச் சுத்திச் சுத்திஎப்ப பார்த்தாலும் பெடியங்கள். ''அம்மா''''அம்மா''வாய்துளிரக்கூப்பிடேக்கைமனுசிகவலையைமறந்து சமைச்சுப்போடுது மூத்தவனோடை ஒராள் ரெண்டாளாய்வரத்தொடங்கியிப்ப அவனில்லாட்டிலும் வருகுதுகள். இடையிலை கொஞ்சநாளாய் அவனைக் காணேல்லை பறாளைபத்தின பெடியன் திரும்பி வரேக்கை நெஞ்சு விரிஞ்சு உருண்டு திரண்டு முகமலர்வோடை வந்தான். பிறகும் போய் போய் வந்தவன் இடையிலை வராமலே விட்டிட்டான்; அவன் இனி வரேலாத இடத்துக்கு போட்டான் எண்டதும் மனுசி துடிச்சுப்போச்சு இருந்தாலும் ஓடேல்லை. இப்பவும் நம்பிக்கையோடை எரியிற நெருப்பிலை தானுமல்லே சேர்ந்தெரியுது.

ஆனந்தன் தான் வந்த வேலையை மறந்தவனாய் வீட்டையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆனந்தன் உம்மடை படிப்பு எப்ப முடியுதெண்டு சொன்னனீர்'' வசந்தா மாமியின் குரல் அசரீயாய் காதில் கேட்டு ''என்ன மாமி ......ம்ம்.....இன்னுமொரு இரண்டுமாசம் இருக்கு'' ''அதோடை நீர் வீட்டை போயிடுவீர் இல்லையே''மாமி ''ஓமோம் இப்போதைக்கு அதுதான் பிளான்'' என்றவனுக்கு வசந்தா மாமி வீட்டை யாருக்கும் எடுத்துக் குடுக்கச் சொன்னது ஞாபகம் வரவே ''ஏன் மாமி வீட்டுக்காரரை கடிதம் எழுதிக் கூப்பிடப் போறியளே'' மாமியை வம்புக்கிழுத்தான் ''ஆனந்தன் என்ன விசர்க்கதை கதைக்கிறீர் அதுகள் இஞ்சை எப்படி வாறது; குறைஞ்சது கரண்ட் கூடஇல்லை''வசந்தா மாமியின் கோபம் அவனுக்கு சிரிப்பை மூட்டியது. ''மனிசர் கரண்டிலையே இயங்கினம். அப்படியெண்டால் இஞ்சை இந்த சனமெல்லாம் போட்டால் போட்டபடி விறைச்சுப் போயே கிடக்கினம்'' கேட்க நினைச்சாலும் கேட்காமலே விட்டாள்.

''மாமி நடராசர் மாஸ்ரர் இப்பவும் கேட்டவர்'' தம்பி அவை எப்படி பிச்சல் பிடுங்கலுகள் இல்லாத ஆக்களோ'' வசந்தா மாமி ஒரு நெளியலோடை கேட்டா. ''ஓம் மாமி அருமையான மனுசன். பென்னம் பெரிய வீடொண்டு இருந்தது. பரந்தனிலை மில்லும் இருக்கு போன மாசம் தான் வீட்டையும் அவற்றை கடைசி மகளையும் குண்டு வீச்சாலை கொண்டு போட்டாங்கள். அவருக்கும் சகோதரங்கள் எல்லாம் வெளியிலைதான் அந்தாள் இஞ்சை தானிநப்பரெண்டு பிடிவாதம் பிடிச்சுக் கொண்டு நிற்குது'' ஆனந்தன் சொல்லி முடிக்க முன்னமே மாமி ''தம்பி அப்ப அவையை நாளைக்கு வரச்சொல்லுமன்'' அவனுக்கு அது காதில விழவேயில்லை தாஜ்மாலைப் பார்த்தான். இனி அது சிரிக்கும். அழும். ஆடிப்பாடும். எல்லாம் செய்யும். தங்கடை இருப்பிற்காய் தவமிருக்கிற மனிசரோடையல்லே அது சேருது. அதுகின்ரை குசினியிலை இனி நெருப்பு தொடர்ந்து எரியும்.

கி. சிவஞானம்

# வடக்கில் வங்கிகள் முழு வீச்சில் செயற்படத் தயங்குவது ஏன் ?

**கோவிந்தன்**

**1990** இல் சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது மீண்டும் ஒரு யுத்தத்தைக் கட்டவிழ்த்தபின், தமிழீழமெங்கும் அத்தியாவசிய சேவைகள் பெரிதும்பாதிப்புக்குள்ளாகின இந் நிகழ்விற்கு போர் காரணமென்பதை விட சிறிலங்கா அரசின் திட்டமிட்ட செயல்களே மூல காரணமாகியது. சிறிலங்கா அரசு புலிகள்மீது நடவடிக்கை எடுப்பதாககூறிக்கொண்டு, மிக நுணுக்கமாக திட்டங்களைத் தீட்டி. தமிழ் மக்களை சகல வழிகளிலும் நசுக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது. போர் - இராணுவ நடவடிக்கையொருபுறம் இருக்க, சுகாதார, பொருளாதார வழிகளினாலும் தமிழ் மக்கள் மீது ஒரு யுத்தத்தை நடத்தி வருகிறது.

வெளிப்படையான பொருளாதாரத் தடைகள் மட்டும் நடவடிக்கையாக இல்லாது பல மறைமுக நடவடிக்கைகளையும் சிறிலங்கா அரசு மேற்கொண்டு வருகிறது. உதாரணமாக வடகிழக்கில் புனரமைப்புக்கெனவெளிநாடுகளினால் வழங்கப்பட்ட பல கோடி ரூபாக்களை வங்கிகளினூடாக கடனடிப்படையில் வழங்க முனைந்துள்ளதாக காட்டிக்கொள்கிறது. ஆனால் கடன் வழங்க வங்கிகள் விதிக்கும் காப்புறுதி போன்ற நிபந்தனைகளை பூர்த்தி செய்ய விடாது சில முக்கிய காப்புறுதிகளை வடகிழக்கு பகுதியில செய்யக்கூடாது என்று தடையும்செய்துள்ளது. வங்கிகள் இதன் காரணமாக பெரியளவிலான கடன்களை வழங்குவதில்லை. இது அரசு தெரிந்து மறைமுகமாக, வங்கிக் கடன்கள் கொடுபடாதுதடை செய்யும் ஒரு தந்திரமே. ஆனால் பல்வேறு கடன்களை வங்கிகள் வழங்கக்கூடிய நிலையில் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்தொழில், விவசாய வர்த்தகத்துறை என்பவற்றிற்குபுத்துயிரூட்டுவதன் மூலம்பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் ஆட்களுக்கு புனர்வாழ்வளிப்பதையும, சொத்துக்களை புனரமைப்பு செய்தலையும் செயற்றிடமாகக் கொண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி, சிறிலங்கா அரசுடன் 1989 டிசம்பர் 12 இல் ஒப்பந்தமொன்றைச் செய்தது இத் திட்டம் 1990 இல்இருந்து 1992 வரையிலான மூன்றாண்டு காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தவென செய்யடபட்ட போதும் 1992 இல் இததிட்ட நடைமுறைப் படுத்தலுக்குரிய காலம் நீடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இலங்கை வங்கி, மக்கள்வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி ஆகிய வங்கிகளினூடு செயற்படுத்துகிறது. இதற்கென ஒதுக்கப்பட்ட தொகை 537.3 மில்லியன் ரூபாக்களாகும்.

இச் செயற்திட்டத்தை சிறிலங்கா அரசு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கைச்சாத்திடுகையில்,பாதிக்கப்பட்டபிரதேசங்களான வடக்கு கிழக்குடன், எல்லைப் புறமாவட்டங்களாகிய அநுராதபுரம், அம்பாந்தோட்டை, மொனராகலை,பொலநறுவை,புத்தளம் ஆகியவற்றையும இணைத்துக் கொண்டது. வடக்கு கிழக்குக்கென கைச்சாத்திட்ட இத் திட்டத்தில் இப் பகுதியில் 75 வங்கிக் கிளைகளினூடாகவும், எல்லைப்புற மாவட்டங்களென இணைத்த சிங்களப் பகுதிகளில 107 வங்கிக்கிளைகளினூடாகவும் இச் செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்தி வருகிறது.

இலங்கை வங்கிக்கு 241.8 மில ரூபாவும், மக்கள் வங்கிக்கு 241 8 மில். ரூபா. ஹறறன் நஷனல் வங்கிக்கு 53.7 மில். ரூபா ஒதுக்கப்பட்டுள்ள இத திட்டபணத்தில் வடக்கு, கிழக்கிலுள்ள இவ் வங்கிக் கிளைகள் சில மில். ரூபாக்களையாவது கடந்த மூன்றாண்டுகளில் செலவிட முனையவில்லை இதற்கு காரணங்களாக காப்புறுதி நிறுத்தி வைத்திருத்தலும். மீளளிப்பு சம்பந்தமான சந்தேகங்களும் காரணமாக இவ் வங்கி அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் உண்மையில் அரசு வங்கி அதிகாரிகளின் அக்கறையீனமும், யதார்த்த நிலையை கவனத்தில் கொள்ளாததுமே காரணங்களாகும்.

இக் கடன் திட்டத்தைவிட, சுயதொழில் வாய்ப்புக்கடன்கள் ஜனசவிய கடன் திட்டங்கள். ஏனைய விவசாய, கால்நடை கடன் திடடங்களென பல திட்டங்கள் வங்கிகளிடம் இன்றும் நடைமுறையில் உள்ளன. இவற்றிற்கு விசேட நிபந்தனைகள் (காப்புறுதியுட்பட) எதுவும் இல்லை. புனர்வாழ்வு, புனரமைப் புக் கடன்களைவிட ஒருரி வீதங்களால் வட்டி வீதம் அதிகம் அபிவிருத்திக் கடன்களான பெரியளவிலான கடன் தொகைகளுக்கே சில விசேட நிபந்தனைகளும் உள்ளன. இத்திட்டங்கள் வட-கிழக்கில் வழங்கக் கூடாது என்ற எந்தத்தடையும் விதிக்கப்படவுமில்லை இத்திட்டங்களினால் வங்கிகள் பாதிப்படையாது - அதாவது வழங்கப்பட்ட கடன்கள் திரும்பி வராத நிலையில் ஓரளவு தொகை மத்திய வங்கியினால் மீளளிப்பு செய்யும் நிலை உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது இந்நிலைகளில் வங்கிகள் கடன்களை வழங்க முன்வராதநிலை, இவ்வங்கி அதிகாரிகளின் செயல்களில் பல வித சந்தேகங்களை தோற்றுவிக்க முனைகிறது.

இன்றும் தொடர்ந்து வங்கிகள் வட-கிழக்கு பகுதிகளில் சுமாக இயங்கி வருகின்றன. பொதுமக்களின் வைப்புக்களை ஏற்றுக்கொள்கின்றன. வங்கிகளினால் நடைமுறைக்கு கொண்டுவரும் வருமானம் தேடும் திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. ஆனால் கடன்களை வழங்க இவை முன்வருவதில்லை. கடந்த ஆண்டின் இறுதியிலும். இவ் வாண்டின் தொடக்கத்திலும் ஓரிரு வங்கிக்கிளைகள் சில கடன் திடடங்களை நடைமுறைக்கு கொண்டுவந்துள்ள போதும். பெருமளவு கிளைகள் இதில் ஈடுபடவில்லை. விவசாயக் கடன்கள் வழங்க பயிர்க்காப்புறுதியில்லாத நிலை, கடன்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத நிலைக்கு காரணமாக சொல்லப்பட்ட போதும், கடந்த கால போகத்தில் பயிர்க்காப்புறுதி இங்கு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது மேட்டு நிலப்பயிர் கடன்களுக்கு இப் பயிர்க்காப்புறுதி அவசியமற்றது என்பதும் இங்கு கவனிக்கதக்கது.

கடன்கள் வழங்காதிருப்பதற்கு வங்கி அதிகாரிகள் சொல்லும் காரணங்கள் விநோதமானவை. செயலக கூட்டத்தில் வங்கி அதிகாரியொருவர் கடன்களுக்கு என ஒதுக்கப்பட்ட பணம் முடிவடைந்சது என்றார். கடந்த காலங்களில் பெறப்பட்ட கடன்சள் மக்களால் ஒழுங்காகத்திருப்பிச் செலுத்த படவில்லை,காப்புறுதிகள் இல்லை போதியகாகிதாதிகள்இல்லை, ஊழியர்பற்றாக்குறை போர்ச் சூழநிலை தொடர்ந்து நிலவி வருகிறது கடன்களை வழங்கினால் திரும்பிப் பெறலாம் என்பதற்கு உத்தரவாதமில்லை இவ்வாறு பலவிதமாக தெரிவிக்கப்படுகின்றன. இத்தனைக்கும் இவ்வங்கிகள் புதிய வைப்புத்திட்டங்களை அறிவிக்கின்றன காசு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. வங்கி அலுவல் நேரத்தை அதிகரிக்கின்றன. ஊழியர்கள், பல்வேறு இடங்களுக்கும் சென்று வங்கியின் நடவடிக்கைத் திட்டங்களைத் தெரிவித்து. வைப்புக்களைப்பெறுகின்றனர், முன்னர் கொடுக்கப்பட்ட கடன்களை வசூலிக்கின்றனர். இச்செயல்களுக்கு வங்கிகளுக்கு காகிதாதிகள் பற்றாக்குறையோ, ஊழியர் பற்றாக்குறையோ இராணுவத்தினால் விடுவிக்கப்படாத இடமென்ற நிலையோ, காப்புறுதி திட்டங்களோ,போர்ச் சூழ்நிலையோ தடங்கலாக இருப்பதாகத் தெரியவில்லை.

மறுவழமாக, இவ்வங்கிகள் பெறுகின்ற வைப்புக்களை அதாவது வங்கிகள் மக்களிடம் பெற்றுள்ள கடன்களை. மக்கள் திருப்பிக் கேட்டவுடன் கொடுக்குமா என்பதற்த என்ன உத்தரவாதமுள்ளது? வங்கிதான் வழங்கும் கடன்களுக்கு எதுதடையாக உள்ளது என்றதோ, அதையே திருப்பி மக்களுக்கும் சொல்லாதா? ஏற்கனவே இங்கு மக்களால் அடைவு வைத்த நகைகளுக்கு என்ன நடந்தது என்பது யாவருமறிந்ததே.

எமது மக்களின் வைப்புக்கள். எமது மக்களை மேலும் சிறிலங்கா அரசு நசுக்க பாவிக்க வங்கிகளின் இந்நடவடிக்கை துணை பேகின்றன. இவ்வைப்புக்களுக்கு எதிராக எமது மக்களுக்கு கடன்களை இவ்வங்கிகள் வழங்காது இருக்கும் போது இவ் வைப்புக்கு எதிரான கடன்கள் தென்னிலங்கையில் வழங்கப்படுகின்றன போரின் காரணமாக சீரழியும் பொருளாதாரத்தை சிறிலங்கா அரசு தென்னிலங்கையில் பாதுகாக்க இங்குள்ள வைப்புக்கள் கைகொடுக்கின்றன. இங்குள்ள வங்கிகள் அபிவிருத்திக்குரிய கடன்களைசெய்ய முன்வரவேண்டுமெனபதில்லை. குறைந்த பட்சம் உயிர்காக்கும் பொருளாதாரதிட்டமிடலுக்காகவேனும் சிறியளவிலான கடன்களைச் செய்ய முன்வரலாம். இதற்கு தடைகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

சிறுசிறு விவசாய உற்பத்தி முயற்சி. சுயதொழில் முயற்சி போன்ற கடன்களை வழங்கக் கூட இங்குள்ள சில வங்கியதிகாரிகள் முரண்டுபிடிக்கின்றனர். இவர்கள் சொல்வது, வங்கி சட்டதிட்டங்கள் நடைமுறைகள் பலருக்கு விளங்குவதில்லையெனபதே!

வைப்புக்களைப் பெருக்கி தமது தலைமையகத்தில் இருந்து நல்ல பெயரை எடுப்பதுடன் எந்தவிதம னபிரச்சினையுமின்றி தலைமையலுவலகத்தில் இவ் வைப்புக்களுக்கு வங்கிகள் வட்டிகளைப் பெற்று இலாபத்தை யீட்டி வருகின்றன. இந்நிலை அதிகாரிகளின் பதவியுயர்வுகளுக்கு மிக வேண்டிய ஒன்றே சிலவங்கிகள் வைப்புக்களுக்கு எதிராக 85 வீதமான கடன்களை கொடுக்க முன்வருவதாக சொல்கின்றன இவை வைப்பிலிட்ட வாடிக்கையாளர்களுக்கு அவர்களுடைய வைப்புகெதிராக கடன்களை வழங்கவே முன்வந்துள்ளன. கடன் தேவைப்படும் ஒருவருக்கு இது கிடைக்கபபோவதில்லை. வாடிக்கையாளர் தனது வைப்பை மேலும் அதகரிக்க இதுவழி கோலுமேயொளிய பொருளாதார நெருக்கடியை நீக்க உதவாது.

இன்று சிறிலங்கா அரசு எமதுபகுதிகளுக்குவரும்வெளிநாட்டு பணத்தை சூறையாடுவதிலும், காலதாமதப்படுத்துவதிலும் கவனத்தை செலுத்தி வருகிறது. இது பணரீதியாக மிகுந்த தாக்கத்தை நாளடைவில் ஏற்படுத்தும். இது பலவிதத்தில் உற்பத்திகளை பாதிப்படையச் செய்யும் சாத்தியங்கள் உண்டு. வங்கிகளும இங்கு வைப்புக்களை சுரண்டி தென்னிலங்கை வளமாக்கலுக்கு உதவ முனைந்துள்ளன. இது நாளடைவில் எமது பொருளாதாரத்தை மிகுந்த சிக்கலுக்குள் உள்ளாக்கும. இதையுணர்ந்து இங்குள்ள அரச, வங்கி அதிகாரிகள் செயற்படவேண்டும். இல்லையேல், இவர்கள் எம் மக்களுக்கு தமது கடமையைச் செய்யத் தவறியவர்களாகவே இருப்பர்.

வங்கிகள், வழங்கிய கடன்கள் திருபபிவரவில்லை என்று ஒரு காரணத்தை சொல்கின்றன. உண்மையில் கடன்களைப் பெற்று தொழில்களை தொடங்கி, சிறிலங்கா தொடுத்த போரினால் அவற்றையிழந்தவர்கள் பலர் இவர்கள் கூட இன்று சிறிது சிறிதாகவேனும் தாம்பட்டகடன்களைக் கட்ட முனைவதைக் காணக்கூடியதாக உள்ளது. பெற்ற கடன்கள் சீராக செலுத்தப்படும் நிலையிலேயே வங்கிகள் தொடர்ந்து கடன்களை வழங்க முடியும் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் தவணை தப்பிய கடன்கள் இருப்பது மட்டும் கடன் வழங்கலுக்கு தடையல்ல. தவணைதப்பிய கடன்பட்டவர்களுக்கே, மீண்டும் புதிய கடன்களை வங்கிகள் வழங்கக்கூடிய முறைகளை வங்கிகள் அறிமுகப்படுத்தியுள்ளன இவை இன்று நடைமுறையிலும் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.கடன்களைப்பெற்று முறைகேடாக சிலர் நடப்பதனால் பலர் அவ் வசதிகளை பெறவியலாது இழப்பதுடன் எமது பிரதேசமும் பாதிப்படைகிறது என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம்.

இந்நிலையில் பலவித அச்சுறுத்தல்களுக்குமிடையில் துணிந்து நின்று எதையும் தாங்கிப் போராடுகின்ற எமது மக்களின் நலனில் சிறிதளவாவது கவனத்தை இவ்வதிகாரிகள் செலுத்தவேண்டும். எமது வைப்புக்கள் எமது பிரதசத்திற்கென செலவிடப்படவேண்டும் என்ற நிலையை உணர்ந்து செயல்பட வேண்டும். உண்மை நிலையை உணரவேண்டும். இதுவே இன்று இவ்வதிகாரிகள் இம் மக்களின் விடிவுக்கு செய்யும் முதல் உதவியாக இருக்கும்.

## தேசியகீதங்களின் உதயம்

உலகின்ஒவ்வொருநாடும்தமக்கெனஒருதேசியகீதத்தைக் கொண்டுள்ளனதேசியகீதங்கள்பெரும்பாலும்நாட்டுப்புறப் பாடல்களிலிருந்துதான்தோன்றியுள்ளன இன்னாரென்று தெரியாத யாரோ ஒருவரால் இயற்றப்பட்ட ஒரு பாடல் மக்களால் தமது ஒற்றுமையையும், வளத்தையும் வெளிக்காட்டும் வகையில் விரும்பிப் பாடப் பட நாளாவட்டத்தில் அதை அப்படியே ஏற்று அரசாங்கமே சட்டரீதியாக இதுதான் தேசியகீதம் என்று அறிவிக்கிறது

ஒரு கிராமத்தில் யாரோ ஒருவர் இசையமைத்து தன் கிராமத்தின் பெருமைகளை பாட - அந்த பாட்டின் பொருளும் - இசையும் மக்களுக்குப் பிடித்துப் போக- அவர்களும் அதையே திரும்பப்பட - தமது கிராமத்தின் திருவிழக்களில் கிராமத்தின் ஒற்றுமையை மற்றக் கிராமங்களுக்குக் காட்டும் வகையில் உற்சாகம் மிகுந்து பாடும் இப்பாடல்தான் தேசிய கீதம் ஒன்றின் தோற்றுவாயாக இருக்கின்றது இந்த வகையில் சில நாடுகளின் தேசிய கீதம் உருப்பெற்ற விதம் பற்றி மீட்டுப் பார்ப்பது சுவாரசியமாகும்.

போர் முனையில் தேசிய கீதம் பிறப்பிக்கப்பட்ட நாட்டிற்கு பிரிட்டன் ஒரு உதாரணமாகும். போர் புரியும் சமயத்தில் உற்சாகத்துடன்பாடிச்சென்றுஎதிரியைத் தாக்கி வெற்றி பெற்றனர். பின்பு அந்தப் போர் இசைப் பாடலையே தங்கள் நாட்டின் தேசிய கீதமாக ஆக்கிக் கொண்டார்கள். ''ஆண்டவரே எங்கள் அரசியைக் காப்பாற்றும்'' (காட் சேவ் திக்வின்) எனத் தொடங்கும் இப் பிரிட்டிஷ் தேசிய கீதத்தின் இசை அமைப்பையும் மெட்டையும் தழுவி ரஷ்யா. டென்மார்க், சுவிட்சலாந்து போன்ற நாடுகளும் உலகிலுள்ள சில ஆங்கிலம் பேசும் நாடுகளும் தமது தேசிய கீததலை ஆக்கிக் கொண்டன.

அமெரிக்காவின்தேசியகீதம்கூடபிரிட்டிஷ்தேசியகீதத்தின் இசையை அடிப்படையாகக் கொண்டது தான்.

1619 ஆம் ஆண்டில் ஜான்புல்என்னும் இசையமைப்பாளரால் உருவாக்கப்பட்ட காட் சேவ் திக் வின் என்னும் பாடல் 1745ஆம் ஆண்டில் முதன் முறையாக பொது நிகழ்ச்சியில் பாடப்பட்டது. 126 ஆண்டுகளின் பின்னர் தான் பிரிட்டனின் தேசிய கீதமாக அரசினால் அங்கீகாரம் செய்யப்பட்டது.


1812 ஆம் ஆண்டில் போர்க்கப்பல் ஒன்றில் பயணம் செய்த பிரான்ஸில் ஸ்காடகே என்பவரால் அமெரிக்காவின் தேசிய கீதமானது 'ஸ்டார் ஸ்பாங்கில் டு பேனர்'' என்னும்கீதம் உருவாக்கப்பட்டது.' திமார்ஸெபிலாய்ஸ்' என்னும்பிரெஞ்சுத் தேசிய கீதம் பிரெஞ்சுப் புரட்சியின் போது கிறை யோசப் என்னும் பிரெஞ்சு கப்டனால் இயற்றப்பட்டது. ஆஸ்திரியாவைச் சேர்ந்த புகழ்பெற்ற இசையமைப்பாளர் ஃபிரான்ஸ் ஜோசப் என்பவரால் இயற்றப்பட்ட பாடலைத்தான் ஜெர்மனிதனது தேசிய கீதமாக ஏற்றுக்கொண்டுள்ளது.

இவை தவிர வார்த்தைகளே இல்லாமல் வெறும் இசையை மட்டுமே 23 நாடுகள் தமது தேசிய கீதமாக ஏற்றுக்கொண்டிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நல்லூர் ... யாழ்ப்பாணம்

# கணித விஞ்ஞான மூலவள நிலையம்

## - ஒரு சாதனை



ஓராண்டு நிறைவு விழாக் கொண்டாடும் யாழ் மாவட்ட கணித விஞ்ஞானமூலவள நிலையம் கணிதம் கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டில் ஓர் அடிப்படைப் பார்வையை வழங்கியிருக்கிறது. அதன் எளிமை மாணவரைக் கவரக் கூடியது. மூலவள நிலையத்துக்கு வித்திட்ட உதவி கல்விப் பணிப்பாளர் [ விஞ்ஞானம் ] திருமதி அ. வேதநாயகத்தின் சேவை பாராட்டுதற்குரியது-

**பேட்டி: மதன்**

**மா**ணவர்களுக்குக் கல்வி வழங்கும் பணியில் முறைசார்ந்த பள்ளிக் கூடங்கள் மட்டும்ஈடுபடுதல்போதாது என்பதை உணர்ந்து கோப்பாய்மகாவித்தியாலய வளாகத்தில் யாழ். மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையம் என்ற பெயரில் வித்தியாசமான ஒரு கல்விக் கூடத்தை அமைத்து அதை நிர்வகித்துக் கொண்டிருக்கிறார் - விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளரான திருமதி அருளேஸ்வரி வேதநாயகம். தற்காலத்தில் கணித, விஞ்ஞான பாடங்களில் நிகழ்ந்து வரும் மாற்றங்களின் நோக்கமும், பரப்பும்கணிதவிஞ்ஞானமூலவள ஆய்வு நிலையத்தின் தேவையை உணர்த்துகின்றன. இந்தத் திட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியுள்ளார் அவர். பாராட்ட வேண்டிய விஷயம்.

இப்படி இதை ஏன் நடத்துகிறார்என்று கேட்டோம்.

''எமது இளமைக்காலத்தில் கணிதம், எண்கணிதம் என்று பிரித்துக் கற்பித்தார்கள். ஆனால் இன்று நிலைமை வேறு. இன்றைய தலைமுறை எண்கணிதம் உள்ளிடக் கணிதம் அவசியம் படிக்கவேண்டும். பகிரங்கப் பரீட்சைகளில் அநேகமான பாடசாலைகள் பூச்சியம் வீதம் தான் பெற்றுள்ளன. பார்த்தவுடன் அதிர்ச்சியாக இருந்தது. என்ன காரணம்? கணிதத்தில் ஏற்பட்ட பின்னடைவுக்கான காரணகாரியத்தை அறியும் வகையில் குறை காண் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் மூலம் சில குறைகளை இனங்காணக் கூடியதாக இருந்தது. ஆண்டு பதினொன்றில் மேற்கொள்ளப்பட்டஆய்வறிக்கையின்படி நிறை எண்கள் செய்கையில் தெளிவின்மை காணப்பட்டது. தசம எண்களிலும் அதே நிலைதான். அடிப்படை அட்சரகணித எண்ணக்கரு உருவாக்கம் இல்லாமை மாணவரைப் பெரிதும் பாதித்திருந்தது. கேத்திரகணிதத்தை மாணவர்கள் முற்றாக வெறுக்கிறார்கள் என்பதைப் பார்க்க அதிர்ச்சியாக இருந்தது. கேத்திர கணிதத்தில் 7 ஆம் ஆண்டில் ஒழுக்கு என்ற அலகில் மாணவரிடம் அடிப்படை அறிவு குறைவாகக் காணப்பட்டதே இதற்கான பிரதான காரணமாகும்'' இவ்வாறு அருளேஸ்வரி வேதநாயகம் தெரிவித்தார்.

### கற்பித்தல் உபகரணங்கள்

''கணிதம் கற்றல் நடவடிக்கையை மாணவர் மத்தியில் தூண்டி விட்டால் தான் கற்பித்தல் நோக்கம் சிறிதளவாவது நிறைவேறியதாகும். ஆனால் இது சாதாரண காரியமா? ஆய்வின் மூலம் இனங்காணப்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும் பரிகாரக் கற்பித்தல் மேற்கொண்டு, மதிப்பீடு செய்து ஒரு திட்டத்தை வகுக்கப் பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அடுத்தாற்போல் வகுப்பறை மேற்பார்வையில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் மெதுவாக உள்ளூர்ப் பொருள்களாலான கற்பித்தல் உபகரணங்களைச் செய்து வள நிலையத்தில் வைத்திருந்தோம். இது ஓர் எளிமையான முன்னோடி நடவடிக்கை. இந்த அணுகுமுறை மூலம் கணிதத்தில, ஒரு பிடிப்பு ஏற்படும்என்பது எமது நம்பிக்கையாய் இருந்தது. எமது நம்பிக்கைவீண்போகவில்லை.

'1991 க. பொ. த (சாதாரணம்) பரீட்சைப் பெறுபேறுகளை கணக்கீடுசெய்ததில் கணித பாடத்தில் பெறுபேறுகள் குறைவாக இருந்ததைக் கவனிக்கமுடிந்தது. இந்தவகுப்புகளில் கணித பாடத்துக்குப் பொறுப்பில் இருக்கும் ஆசிரியர்களுக்கு விடுமுறை காலங்களில் - சனி, ஞாயிறு தினங்களில் செயலமர்வுகளை நடத்தினோம். வளநிலையத்தைப் பயன்படுத்தியதன் மூலம் கணித பாடத்தில் கற்பித்தல் உபகரணங்களைத் தயாரிக்க முடியாது என்றிருந்த நம்பிக்கை மாறியது. கணித விஞ்ஞான மூல வள நிலையம் மற்றவர்களை ஒரு சுய தேடலுக்கும் தூண்டியது. நிலையத்தைப் பார்வையிட்ட பள்ளிக்கூட மாணவர்கள் உபகரணங்களைச் செய்து எம்மிடம் காட்டினார்கள். இன்றைய பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா மாணவர்களும், ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சியில் இருப்பவர்களும் அண்மைக்காலமாக எமது நிலையத்துக்கு விஜயம் செய்து வருகிறார்கள். இன்று வரை 600 கணித மற்றும் விஞ்ஞான ஆசிரியர்கள் எமது மூலவள நிலையத்தைப் பார்வையிட்டுள்ளார்கள்'' என்றார் திருமதி அ. வேதநாயகம்.

வள நிலையத்தைப் பயன்படுத்துவதால் ஆசிரியரின் பயிற்று முறையில் ஏற்படும் மாற்றம் ஒரு பக்கம் இருக்க இந்தச் சிறப்புச் சூழலில் உள்ள வேறுவசதிகள் என்ன என்று கேட்ட போது-

''குறிப்பிட்ட சில கணித பாட அலகுகளுக்கு உபகரணங்கள் விசேடமாக உருவாக்கப் பட்டுள்ளன. உதாரணமாக கன அளவு காண்பதற்கான முழுமையான உபகரணம் இருந்தாலும், புதிதாகக் கோளத்தின் கனஅளவு காண்பதற்கான கற்பித்தல் உபகரணம் உருவாக்கப் பட்டுள்ளது. ஆண்டு ஆறு முதல் பதினொன்று வரை வரைபு பற்றிய (Graph) அறிவை முழுமையாகக் கற்பிக்கக் கூடிய உபகரணம் மற்றும் நிறை எண்களைக் கூட்டுவதற்கான உபகரணங்களும் உருவாக்கப் பட்டுள்ளன.

''சிறார்களின் மனோபாவத்தையும் நாம் கவனத்தில்எடுத்துக் கொள்ள வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு மாணவர்களின் மனதில் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் வினாடி வினாப்போட்டி (Quiz Programme) எமது மூலவள நிலையத்தால் நடாத்தப்படுகிறது. விஞ்ஞானதினம் மற்றும் வைபவங்களில் மாணவர்கள் பங்கு ஏற்று நடித்தல், ஆடுதல் பாடுதல் போன்றவை கணிதம் சார்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளாக அமையும் போது புதிய தரிசனங்களைத் தந்து விடுகின்றன. மற்றும்படி, கற்றல் கற்பித்தல் உபகரணம் உபகரணங்கள் சம்பந்தமான போட்டிகள் மூன்று மட்டங்களில் - மாணவர்கள். ஆசிரியர்கள். சேவைக்கால ஆலோசகர் மட்டங்களில் நடைபெறுகின்றன. இடம் பெயர்ந்த பாடசாலைகளுக்கும், வளமில்லாத பாடசாலைகளுக்கும் எமது செயல்முறையை விரிவாக்கியுள்ளோம். நாளை இடம் பெறும் ஓராண்டு நிறைவு விழாவில் துல்லியம் என்ற சஞ்சிகை வெளியிடுகிறோம். சேவைக்கால ஆசிரியர்களுக்கு கணித உபகரணப் பெட்டிகளும் வழங்கப்படவுள்ளன'' என்றார் உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்.

ஃ ஃ ஃ

யாழ் மாவட்ட கணித விஞ்ஞான நிலையத்தைப் பற்றி ஒரு மூத்த கல்வி அதிகாரியிடம் கேட்ட போது, 'பெயர் போட வேண்டாம்' என்ற வேண்டுகோளுடன் அவர் வழங்கிய தகவல்...

இந்த நிலையத்துக்கான நிதி உதவி கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படுவதில்லை. இந்த நிலையம்ஒரு சுயமுயற்சி. இது வரை இந் நிலையத்துக்காக உதவிக் கல்விப்பணிப்பாளர் (விஞ்ஞானம்) ரூ 25, 000 ஐ தன் கைபால் செலவு செய்திருக்கிறார். கல்விக்குச் செலவிடும் பணம் எதிர்காலச் சமூகத்துக்கான முதலீடு என்று அவர் செலவு செய்கிறார். கல்வி விலை பேசி விற்கப்படும் இந்தக் காலத்தில் இந்த முயற்சி பாராட்டுதற்குரியது. இது சரித்திரமாகிற திட்டம். இதனைச் சமூகம் பொறுப்பேற்க வேண்டும்.

---

# 'அமுத மொழியன்' எழுதிய மொட்டுகளல்ல வித்துக்கள் ஒரு பார்வை

**க**விதை என்பது ஓர் வடிவமன்று. பல வடிவங்களினூடாக கவிதையை வெளிப்படுத்தலாம். மரபுக்கவிதை, புதுக் கவிதை என பிரித்துப்பார்க்க வேண்டிய அவசியமில்லை. கவிதை என்பது ஒன்றுதான். விருத்தம், வெண்பா, அகவல் போன்ற அனைத்தும் வடிவங்கள் தாம். இந்த வடிவங்களுக்குள் கவிதையினைச் சொல்லலாம். இவைபோன்ற மரபான வடிவங்களை மீறியும் கவிதையினைச் சொல்லலாம்.

கவிதை என்பது உயிர்போன்றது. வடிவம் என்பது உடல் தான். உரைநடையுள் கூட கவித்துவம் கண்டு மகிழ்கிறோம். ஒரு ஓவியத்தையோ, புகைப்படத்தையோ, காட்சியினையோ காணும்போது கவித்துவமானதாகவுள்ளது எனச் சொல்கிறோமல்லவா?

ஆம். உணர்வு சார்ந்ததும், உணர்ச்சிகரமானதாகவும் கவிதைகள்வெளிப்படுகின்றன.

மரபான வடிவங்களுக்குள் சொல்லப்படுபவை கவிதைகளாகவும் இருக்கின்றன. சில வேளை கவிதைகளாக இல்லாமல் வெறும் வார்த்தைகளின் அடுக்காகவும், ஓசை ஒழுங்காவுகம் மட்டும் அமைந்து விடுகின்றன. அதேநேரம், மரபு மீறிய வடிவங்களுள் சொல்லப்படுபவையும், கவிதைகளாகவும் உள்ளன. வெறும் வார்த்தை ஜாலங்களாகவும்அமைந்து விடுகின்றன. எனவே, மரபான வடிவங்களுக்குள் சொல்லப்படும் விடயங்களும், மரபை மீறிய வார்த்தை ஜாலங்களும் கவிதை போன்றதோர் மாயத் தோற்றத்தை காட்டிநிற்கின்றன.

மரபுக்குள் வருவதுதாம் கவிதைகளெனில் மரபு வடிவங்களைப் படித்துவிட்டு, பயிற்சியின் மூலமே பலர் கவிஞர்களாக உருவாகிவிட முடியும். மரபு வடிவங்களை மீறி எல்லோரும் கவிதை எழுதலாம் என்றால், பத்திரிகைச் செய்தி எழுதுபவர்கூட தம்மைக்கவிஞரெனக் கூறிக்கொள்ளமுடியும்.

மரபு வடிவங்களை மீறிச் சொல்லப்படுகின்ற கவிதைகளில் எளிமை இருப்பதாலும், சமகாலம், போராட்டம் சம்பந்தப்பட்ட கருத்துக்கள் அவற்றில் அதிகம் சொல்லப்படுவதாலும், அவை தற்காலத்தில் பலரால் வாசித்துணரப்படுகின்றன. இதனால். இளைஞர்கள் அதிகமானோர் கவிதை எழுத முயல்கின்றனர். ஆனால், எழுதப்படுகின்றவற்றில் கவிதை என தேறுவன சிலவே. கவிஞர்களாக தேறுபவர்களும் சிலரே.

அமுதமொழியன் எழுதிய மொட்டுகளல்ல வித்துக்கள் எனும்தலைப்பிலான கவிதைத்தொகுதி இவ்வாண்டு ஆரம்பத்தில் மணிஓசையின் இரண்டாவது வெளியீடாக வெளிவந்துள்ளது. அமுதமொழியன் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மாணவராவார். இவரின் பல கவிதைகள் போராட்டம் பற்றியும், சமூகம் பற்றியும் பேசுகின்றன.

கவிதைக் காதலி பற்றி, தன் கிராமத்திற்கேற்பட்ட அவலம்

**புவி**

பற்றி, நெஞ்சில் கனலாகித் தகிக்கும் விடுதலை உணர்வு பற்றியெல்லாம் இவரின் கவிதைகள்சொல்கின்றன. சொந்த அனுபவங்கள், அதனால் ஏற்படும் பாதிப்புகள் என்பன மனதை ஊடறுக்கும் போது வரிகளுக்குள் கவிதை எனும் உயிர் இருப்பதைக் காண முடிகிறது. குறிப்பாக பல்கலைக்கழகம் பற்றியும், அதனோடு இணைந்த இவரது தினசரிவாழ்நிலை பற்றியும் குறிப்பிடும் கவிதைகளை உதாரணத்திற்கு பார்க்கலாம்.

இனிப்புக்களைக் கூட
கசப்பு உறையிலிட்டு
கூட்டுக்குழிசைகளாக
சாப்பாட்டிற்கு முன்னும் பின்னும் தருவதால்
வெறுப்பு நோய் தொற்றிக் கொண்டது.
விரிவுரைகள் விரும்பப்படாமலும்
அறிவுரைகள்
ஆதரவைப் பெறாமலும் போயின.
பலர்
விரிவுரைகளை
விளங்கிக்கொள்ளாமல்
விழுங்கிக் கொள்கிறார்கள்.
சிலர் கற்பனைப் புரவியில்,
வேறு சிலர் நித்திராதேவியுடன்...

தனது அனுபவங்களை இவ்வாறு விளக்கும் கவிஞர் கல்வி கவிதைகள் போலில்லையே... எனவும் ஆதங்கப்படுகிறார்.

மாணவர்களின் மனநிலை பற்றி சொல்கையில்—

இவர்கள் இளம் மலர்கள்
புத்தகங்களுக்குள் மட்டும்
புதைந்து கொண்டு
கருகிவிட்டதால்
வளாகத்து வளவுகளில்
ரோஜாக்களை
வளர்க்க வேண்டியதாயிற்று
என்று குமைகிறார்.

இவரின் வரிகள் பலவற்றுக்குள்ளே கவிதைகள் தென்படுகின்றன. இவருக்குள் உள்ள கவிதா உள்ளம் ஒன்று அடையாளம் காணப்படுகின்றது. ஆற்றலுடன் அனுபவங்களும் அதிகமாக - அதனூடாக இவரின் தேடல் இன்னும் முனைப்புப் பெற - எதிர்காலத்தில் நல்லதோர் கவிஞராக இவர் முகிழ்வார் என்கிற நம்பிக்கையின் 'மொட்டுகளல்ல வித்துக்கள்' மனதில் விதைக்கின்றது.




(சி/ 6114)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்

04-05-1936

மறைவு

15-03-1990

திதி

12 - 03 - 1993

இசை நுட்பவியலாளர்

**மாதவன் நடராஜா**

(ராஜன் மியூசிக்கல் கந்தர்மடம்)

எங்கள் வாழ்வின் அணையாத தீபமாய்
ஒளிவீசிய எங்கள் அன்புத் தெய்வமே
நீங்கள் எம்மைப் பிரிந்து மூன்று ஆண்டுகள்
கழிந்தன இக்காலம் மூவாயிரம் ஆண்டானாலும்
உங்கள் நினைவு எங்கள் உள்ளத்தை
நிரப்பிக் கொண்டே இருக்கும் நீங்கள்
செய்தனவும் திருத்திக்கொடுத்தனவும் ஆகிய
இசைக்கருவிகள் பலவாய இல்லங்கள்தோறும்
ஒலித்துக்கொண்டே இருக்கும்
எங்கள் கண்கள் கண்ணீர் வடித்துக்
கொண்டே இருக்கும் நாங்கள்
உங்களை மறக்க மாட்டோம் நீங்கள்
மீண்டும் எம்மிடம் வரமாட்டீர்களா?
என்று அஞ்சலி செய்து கொண்டே இருக்கிறோம்.

தகவல்:

சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு.
(4423)

மனைவி, மக்கள், மைத்துனர் முருகானந்தன், தேவகடாட்சம்.

## இந்திய நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி

இலங்கை மத்திய வங்கியின் நாணய மாற்று வீதத்தின்படி 100 இந்திய ரூபாவின் பெறுமதி இலங்கைநாணயத்தில்147 ரூபா 18 சதமாக குறைந்துள்ளது. ஆனால் கடந்த நாலாம் திகதி இந்த நாணய மாற்று வீதம் 100 இந்திய ரூபாவிற்கு 178 ரூபா 06 சதமாக இருந்தது இந்தியாவில் கடந்தவரவு செலவுத் திட்டத்தில் இந்திய நாணயம் மிதக்க விடப்பட்டதே இலங்கையில் இந்திய ரூபாவின் பெறுமதி வீழ்ச்சிக்கான காரணமென வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

## இடமாற்றத்திற்கு எதிர்ப்பு

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த ஆறு போதனாசிரியர்களும், விரிவுரையாளர்களும் இடமாற்றம் செய்யப்படுவதை ஆட்சேபித்து தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் யாழ். அரச அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

## அமெரிக்கா ஒரு கோடி டாலர் உதவி

அமெரிக்கா இலங்கைக்கு நீண்டகால குறைந்த வட்டிக் கடன் அடிப்படையில் ஒரு கோடி அமெரிக்க டாலர் பெறுமதியான கோதுமையை வழங்கவுள்ளது.

அமெரிக்க தூதுவர் மற்றும் நிதியமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கம் ஆகியோர் நேற்று முன்தினம் கைச்சாத்திட்ட ஓர் ஒப்பந்தத்தின் படியே இந்த உதவியை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

## "வக்சீன்" மருந்து கிடைத்தது

வடபிராந்திய சுகாதார அத்தியட்சகர் நிலையத்திற்கு குழந்தைகளுக்கான 'வக்சீன்' மருந்து வந்துள்ளது.

இம்மருந்து குழந்தைகளுக்கு தொற்றுநோய்கள் ஏற்படாமல் தடுப்பதற்குப் பாவிக்கப்படும் மருந்தாகும். கடந்த காலங்களில் இம்மருந்து இல்லாமல் பல குழந்தைகளுக்கு தொற்றுநோய் அபாயங்கள் ஏற்பட்டன. தற்போது பருத்தித்துறையில் பொருள்களை இறக்கும் குமணவிலேயே இம்மருந்து எடுத்து வரப்பட்டது.

இதனையடுத்து குடும்பநல சேவை நிலையங்களில் குழந்தைகளுக்கு இந்த "வக்சீன்" ஊசிமருந்து ஏற்றப்படுமென தெரியவருகின்றது. [சி] [நி]

## விவசாய டிப்ளோமா ஒரு வருடகால இலவசப் பயிற்சி நெறி

போதிக்கப்படும் பாடங்கள்

மிருக பரிபாலனம், பயிர்வேளாண்மை. பூங்கனியியல் விவசாய மூலதத்துவங்கள், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல். [ஆண்கள்] மனைப்பொருளியல் [பெண்கள்], ஆங்கிலம்.

தகைமை: க. பொ. த [சாதாரணம்] அல்லது தே. க. பொ த பரீட்சை சித்தியடைந்திருப்பதுடன் 30-4-93 இல் வயது 16—25 க்கு இடைபபட்டிருக்க வேண்டும்

உதவு தொகை வழங்கப்படும்.
விருப்பமுள்ள இருபாலாரும்

**அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி
விவசாய நிறுவனம்,**

மருதனாமடம், சுன்னாகம்
என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி
20-4-93**

(4439)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்

18-02-1935

மறைவு

22-02-1992

**அமரர்
திரு. கந்தையா மாசிலாமணி**

(ஓய்வு பெற்ற பிரதான லிகிதர்)

ஆண்டுத்திதி -- 12-03-1993

ஒளிவீசும் நிலாமுகம்
காண்கின்றோம் - மனக்கண்ணால்
பாசத்தின் தாகத்தை
பாதியில் வைத்துவிட்டு
நீர் பறந்து சென்றாலும்
ஆறாது உம் நினைவு.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு. (4451)

-- குடும்பத்தினர்

# நாளை மாபெரும் நாடகக் கலைவிழா



உரும்பராய் (கிழக்கு)

**காந்திஜி சனசமூக நிலைய**

சிறுவர் பாடசாலை வளர்ச்சிக்காக

காலம்:- **13. 3. 93 சனிக்கிழமை
இரவு 7. 30 மணி**

இடம்:- **உரும்பராய்
சைவத்தமிழ் வித்தியாலயம்**

"இந்தமண் எங்களின் சொந்த மண்" புகழ்
**S. G. சாந்தன்** அரிச்சந்திரனாகவும்,
அரியாலையூர் நடிக கலாமணி
**V. செல்வம்** சந்திரமதியாகவும்

இணைந்து வழங்கும்
அரியாலை, "கலைமகள் கலை ஒளி"
நாடக மன்றம் வழங்கும் ...

# அரிச்சந்திரா மயானகாண்டம்

புராண இசை நாடகம்

எங்கள் நாடகங்களை மேடையேற்ற விரும்புவோர் தொடர்பு கொள்க: அரியாலை கலைமகள் கலைஒளி நாடகமன்றம்
17A, இராஜேஸ்வரி வீதி, அரியாலை, நாயன்மார்கட்டு
(4448)

# பி. பி. ஸியில் பிரேமதாஸ:

## பதில் சொல்ல முடியாத கேள்விகளின் முன்

நிலாந்தன்




சில வாரங்களிற்குமுன்பு இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனத்தின் சிங்கள சேவையைக் கேட்ட என்னுடைய நண்பர் ஒருவர் கூறினார். அதில் ஜனாதிபதி பிரேமதாஸ பேசினாராம். யுத்தத்தின் அழிவுகளைப்பற்றியும் அதனால் இரு இனங்களிற்கும் உண்டாகியுள்ள துன்பங்களைப் பற்றியும் அவரது பேச்சு அமைந்திருந்ததாம். கொடுமையான இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தால் இன்று யுத்தத்தில்விரயமாகும் பெருந்தொகை பணத்தைஅபிவிருத்திக்காக திருப்ப முடியும் என்றும் பிரேமதாஸ கூறினாராம். மேற்படி பேச்சைக்கேட்டுக் கொண்டிருந்த போதுஒரு கட்டத்தில் யுத்தத்திற்கும் பிரேமதாஸவிற்கும எத்தகைய தொடர்பும் இல்லை என்பது போலஅவரது தொனி இருந்ததாகவும் அந்தளவிற்கு யுத்தம்பற்றி பற்றற்ற விதமாக அவர் பேசினார் என்றும் நண்பர் சொன்னார். பக்கச்சார்பற்ற பார்வையாளர் எவரும் மேற்படி பேச்சைக் கேட்டிருந்தால் அப்படியென்றால் இலங்கைத்தீவில் யுத்தத்தை நடாத்திக் கொண்டிருப்பது யார்?'' என்று நிச்சயமாகக் கேட்டிருப்பார்களாம்.

இது பிரேமதாஸவின் பேச்சு வன்மைபற்றியது. அவருடைய பேச்சுகளைக் கேட்ட சிங்களம் தெரிந்த ஒவ்வொருவரும் கூறுகிறார்கள் அவருடைய வசீகரப் பேச்சாற்றலைப்பற்றி

கொழும்பிலிருந்து சமீபத்தில் மற்றொரு நண்பர் எழுதிய கடிதமொன்றில் பிரேமதாஸவின் பேச்சாற்றலைப் பற்றி வியந்து பாராட்டியிருந்தார். சாதாரண சிங்களவர்களை அப்படியே வசியப்படுத்தும் மொழிவளம் அவரது பேச்சில் இருக்குமாம். அவர் நிறையக் கதைகள் கூறுவார். உதாரணங்கள் கூறுவார். எதிர்க்கட்சிகளை நோக்கிப் பதில் சொல்ல முடியாத கேள்விகளை வீசுவார். நல்ல சிங்களம் கற்க விரும்பும் மாணவர்கள் கட்டாயம் கேட்க வேண்டியது பிரேமதாசாவின் பேச்சு என்று மேற்படி நண்பர் எழுதியிருந்தார்.

பிரேமதாஸ சில வாரங்களின் முன்பு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைப் பகிரங்க விவாதத்திற்கு அழைத்திருந்தார். சிறிமாவோ அவ்வழைப்பை நிராகரித்து விட்டார். பிரேமதாஸவின் பேச்சாற்றல் பற்றியும். விவாதத் திறன் பற்றியும் அவர் கொண்டிருந்த அச்சமே மேற்படி நிராகரிப்புக்குரிய முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது.

இத்தகைய தனது பேச்சாற்றல் பற்றியும், விவாதத் திறன் பற்றியும் பிரேமதாஸவிடம் இருந்திருக்கக் கூடிய அதீத நம்பிக்கைகள்தான் கடந்த ஞாயிறன்று அவர் பி.பி.ஸியில் தொலைபேசி நேர்காணல் நிகழ்ச்சியில (ஃபோன் இன்) பங்குபற்றுவதற்குரிய துணிச்சலைத் தந்திருத்தல் கூடும்.

அன்று பௌர்ணமி நாள். சிங்கள பௌத்தர்களிற்குப் புனிதமான ஒரு நாள். நாள்கள் கோள்கள, சகுனங்களில் மிகவும் நம்பிக்கை வைத்திருப்பவரான பிரேமதாஸ மேற்படி ஃபோன் இன் நிகழ்ச்சியில் ஒரு புனித நாளில் பங்குபற்ற நேர்ந்தமையை ஒரு நன்னிமித்தமாக எடுத்திருக்கக் கூடும். ஆனால் அது அவரிற்கு ஒரு தோல்விகளின் இரவாகவே முடிந்தது. அநேகமாக, இழப்புணர்வுடன்தான் அவர் அன்றிரவு நித்திரைக்குப் போயிருப்பார்,

மேடைப் பேச்சு வேறு தொலைபேசி நேர்காணல் வேறு என்பது அன்று நிரூபிக்கப்பட்டது சில வாரங்களிற்கு முன் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், எப்படி நழுவி நழுவிப் பதில் சொல்ல முற்பட்டு இந்தியர்களின் அதிருப்திக்கு இலக்கானாரோ அப்படித்தான் பிரேமதாஸவும் சுற்றிச் சுற்றிப் பதில் சொல்ல எத்தனித்துப் பல தடவைகள் சறுக்கி விழ நேர்ந்தது.

நரசிம்மராவைப் போலவே பிரேமதாஸவும்பதவியேற்றதிலிருந்து சர்வதேசச் செய்தியாளர் மாநாடுகளைத் தவிர்த்து வருகிறார். ஜனாதிபதியானதிலிருந்து சார்க் பிராந்தியத்திற்கு வெளியில் அவர் பயணம் செய்ததில்லை. ஒரு அரசுத்தலைவர் இத்தகைய பயணங்களின் போது பெரும்பாலும் விமான நிலையங்களிலோ அல்லது வேறு சந்தர்ப்பங்களிலோ செய்தியாளர்களால் சுற்றி வளைக்கப்படுவதுண்டு பிரேமதாஸவிற்கு இத்தகைய அனுபவங்கள்குறைவு. இது அன்றைய ஃபோன் இன் நிகழ்ச்சியில் அப்படியே தெரிந்தது. பெரும்பாலான கேள்விகளிற்கு அவர் நேரடியாகப் பதில் சொல்லவில்லை சுற்றிச் சுற்றிப் பதில் சொல்ல முற்பட்டு பல தடவைகள் கேள்விகளை விட்டு விலகிச் சென்றார். அப்பொழுதெல்லாம் இணைப்பாளராக இருந்த பெண் அவரை இடை நிறுத்தி அவருடைய பதில் மிக நீண்டு போவதை அல்லது அவர்கேள்விகளிலிருந்து விலகிச் செல்வதை பூடகமாகச் சுட்டிக்காட்ட வேண்டியிருந்தது. பிரேமதாஸ மிக மெதுவாக ஆனால் அவருக்கேயான புதிரான துணிச்சலோடு பதில்களைச் சொன்னார். அவருடைய பெரும்பாலான பதில்கள் கவர்ச்சி அற்றவை. தர்க்க பலம் அற்றவை. மொழிவளம் குறைந்தவை.

பொதுவாக மேற்குலகம் அவரைப்பற்றி இரண்டு படிமங்களைக் கொண்டிருக்கிறது. ஒன்று (மேற்கத்தய) முதலீட்டாளர்களிற்கு அவர் மிகவும வாய்ப்பானதொரு தலைவர் என்பது மற்றது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களில் இருந்து மீட்கப்பட முடியாத ஒரு தலைவர் என்பது. பிரேமதாஸ அன்றைய ஃபோன் இன் நிகழ்ச்சியில் முதலாவது படிமத்தை மேலும் ஸ்தாபித்திருக்க வேண்டும இரண்டாவதை இயன்றவரை இல்லாமல் செய்ய முயன்றிருக்க வேண்டும். ஆனால் அவர் இரண்டையுமே செய்யத் தவறினார்.

கேள்விகள் முதலில் இனப் பிரச்சினை பற்றியவைகளாக இருந்தன. கிட்டத்தட்ட நிகழ்ச்சியின் அரைவ சிப்பகுதி இனப்பிரச்சினை பற்றியதுதான். தமிழர்களும் தமிழர்களிடம் பரிவுடையவர்களுமஉலகின் பல பாகங்களிலிருந்து கேள்விகளைக் கேட்டார்கள். கேள்விகள் கூரோடும் வேகத்தோடும் வந்தன அதிரடியாக வந்த கேள்விகள் நிகழ்ச்சியைக் கேட்டுக்கொண்டிருந்த தமிழர்களைப் பெருமையும் நம்பிக்கையும் கொள்ளவைத்தன. எத்தனை வாசல்களை மூடினாலும், முற்றுகையிட்டாலும் தமிழர்கள் தனித்துவிடப்படவர்கள் அல்லஎன்று கூறுவது போல மேற்படி கேள்விகள் அமைந்திருந்தன. இத்தருணத்தில் ஒரு பலஸ்தீனக் கவிதையின் வரிகள்தான் ஞாபகத்தில் வந்தன. .. ''மந்தர வலிமை உடையவர் நாங்கள் ஆயிரமாய் எங்கும் பரந்திருப்போம்''...

நிகழ்ச்சிக்குச் சிலநாட்களின் முன் விடுதலைப் புலிகளின் தலைவரை பி.பி.ஸி. நேர்கண்டிருந்தது. மிகவும் பரபரப்புக்குள்ளாகிய மேற்படிநேர்காணலில் அவர்முன்வைத்த சமஷ்டி யோசனைகள் ஃபோன் இன் இல் பிரேமதாஸவை நோக்கிக் கேள்விகளாக வந்தன. பிரேமதாஸ ஒரு விதத்தில் கேள்விகளின் பொறிக்குள் சிக்குண்டவர் போலக் காணப்பட்டார். பி. பி. ஸி. திட்டமிட்டுத்தான் இப்படி இரு நேர்காணலகளையும் அடுத்தடுத்து ஒழுங்கு செய்திருக்குமோ? என்றொரு சந்தேகம் தவிர்க்க முடியாதபடி எழுந்தது.

ஆனால் பிரேமதாஸ திணறினார் எனினும் பின்வாங்கினாரில்லை. இனப்பிரச்சினை பற்றிய எல்லாக் கேள்விகளிற்கும் அவரிடம் ஒரு றெடிமேற் பதில் இருந்தது. அது தெரிவுக்குழு என்பது தான்" எல்லாவற்றையும் தெரிவுக்குழு தீர்க்கும் என்பது போன்றதொரு தொனியை அவரது பதில்களில் கேட்க முடிந்தது. இனப்பிரச்சினையில் தீர்வு காணமுடியாது போனதிற்கான பழியை ஆளுங்கட்சியோடு சேர்த்து எதிர்க்கட்சியும் சுமக்கும்படி செய்வதில் தெரிவுக் குழுவின் மூலம பிரேமதாஸ வெற்றியடைந்து வருவது போலவே தோன்றுகிறது. இத்தகைய கேள்விகளைத் திட்ட வட்டமாக எதிர்பார்த்து அவற்றிற்குரிய பதில்களை நன்கு தயாரிப்பதற்கு வேண்டிய போதுமான அவகாசம் தரப்பட்டிருந்த போதிலும் கூட பிரேமதாஸவால் தர்க்க பூர்வமாகப் பேச முடியவில்லை. பேசவும் முடியாது ஏனெனில் இந்த யுத்தத்தைத் தொடருவதற்குரிய சிங்களவர்களின் தர்க்கங்கள் மிகவும் பலவீனமானவை ஏற்கனவே ஜெயவர்த்தனவும் அத்துலத்முதலியும் இத்தகையகேள்விகளிற்கு இலக்காயிருக்கிறார்கள். அப்பொழுதெலாம் அவர்கள் குதர்க்கமாகப் பேசி கேள்விகளைப் புறக்கணித்திருக்கிறார்கள் அலலது பதில்களை மழுப்பலாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு முன்பு. ஜெயவர்த்தனஃபோன் இன்ஐ ஒத்த நிகழ்ச்சியொன்றின் போது பதில் சொல்ல முடியாத கேள்விகளைக் கேட்ட நபரை மிரட்டும் தொனியில் பதில் கூறினார். ஜே. ஆர். அத்துலத்முதலி போன்றோர் சந்தித்த அதே பதில் சொல்ல முடியாத கேள்விகளை அவற்றின் கூர்ப்படைந்த வடிவத்தில், இப்பொழுது பிரேமதாஸசந்திக்க வேண்டிவந்தது. முன்னவர்களைப் போலவே அவரும் தீர்வுகள் அற்ற வெற்றிடத்துள் நின்றபடி தற்காப்புக் தர்க்கமொன்றில் ஈடுபட நேர்ந்தது.

ஒரு கட்டத்திற்கு மேல் நிகழ்ச்சியின் இணைப்பாளர் நேர்காணலின் மையத்தை இனப்பிரச்சினையிலிருந்து மாற்றினார். ஜே. வி. பி. மனிதஉரிமை மீறல்கள் மற்றும் பத்திரிகையாளர் மீதான கெடுபிடி போன்ற விவகாரங்கள் பின்னர் கேட்கப்பட்டன. முன் கூட்டியே எதிர்பார்த்திருக்கக் கூடிய மேற்படி கேள்விகளுக்கு அவரிடம் றெடிமேற் பதில்கள் இருந்தன. யுத்தத்தில்முதற்பலி உண்மை எனவே, தான் கூறுவது பொய் என்று அவருக்கும் தெரிந்திருந்தது. கேட்டுக் கொண்டிருந்த சிங்களவர்களிற்கும் தெரிந்திருந்தது.

அவருடைய பொருளாதாரத் திட்டங்களைப பற்றி ஒரு கேள்வி மட்டுமே கேடகப்பட்டது. ஆடை ஏற்றுமதியில் இன்று நிலவும் கோட்டா முறையச் சுட்டிக்காட்டிய மேற்படி கேள்வியாளர் ஆடைத் தொழிற்சாலைகள் வெற்றி பெறுமா? என்ற தொனிபட கேட்ட போது, பிரேமதாஸ உலகில் ஆடை அணியும் தேவை இருக்கும் மட்டும ஆடைத் தொழிற் சாலைகளிற்தும் தேவை இருக்கும் என்ற தொனிபடப் பதில் சொன்னார் மற்றும்படி ஜனசவிய பற்றி ஒரு கேள்வி. இந்த இடத்தில் முக்கியமாக ஒன்றைக் கவனிக்க வேண்டும். சிறிமாவோவை விவாதத்திற்கு அழைத்த பிரேமதாஸ, பொருளாதாரத் திட்டங்கள் பற்றியே விவாதிக்கப்பட வேண்டும் எனக் கண்டிப்பான நிபந்தனைகளைப் போட்டார் சிறிமாவோ அதை நிராகரித்து விட்டார். ஆனால் ஃபோன் இந் நிகழ்ச்சியில் பொருளாதாரத் திட்டங்கள் பற்றி ஒரு கேள்வியும், ஏனைய சகல கேள்விகளும் அவர் சிறிமாவோடு விவாதிக்க விரும்பாத விவகாரங்களைப் பற்றியவையாகவும் அமைந்து விட்டன.

உள்நாட்டில் அவர் பதில் சொலல விரும்பாத அல்லது யாரும் அவரிடம் கேட்கத் துணியாத கேள்விகளுக்கெல்லாம்சர்வதேச அரங்கில் அவர் பதில் சொல்ல நேர்ந்தமையானது, இன்றுவெகுசனத்தொடர்பு சாதனங்கள் எத்துணை வலிமையோடும். வியாபகத் தன்மையோடும் காணப்படுகின்றன என்பதை நிரூபிப்பதாயிருந்தது

இதுமாஸ்மீடியா யுகம் இங்கு தொடர்பு சாதனங்களால் பின்னப்பட்ட. மீட்சியற்ற, ராட்சத வலைக்குள் சிக்கிய ரெண்டு கால் பூச்சிதான் மனிதன். இதில் பிரேமதாஸ ஒரு தலைமைப் பூச்சியாக இருக்கலாம் எனினும் அவர் ஒரு பூச்சிதான்.

## பல்கலை. மாணவர்கள் நுழைவை பிற்போடமுடியாது

(கொழும்பு)

இவ் வாண்டு பல்கலைக் கழக அனுமதிக்குத் தகைமை பெற்றுள்ள 9,000 மாணவர்களும் தமது பல்கலைக்கழக நுழைவைப் பிற்போட முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது பல்கலைக் கழக அனுமதிக்குத் தகுதி பெற்றவர்கள் ஒரு வருடத்திற்கு மேல் லீவில் நிற்க இடமளிக்கக் கூடாது என்று பல்கலைக் கழக மான்யங்கள் குழு உப-வேந்தர்களைப் பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக் கழகங்கள் கடந்த காலங்களில் பதற்ற நிலை காரணமாக அடிக்கடி மூடப்பட்டதால், புதிய மாணவர்கள் காலவரையின்றி லீவில் இருந்ததாகவும், பலர் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும் சேர்ந்துள்ளதாகவும் பல்கலைக் கழக மான்யங்கள் குழு தெரிவிக்கிறது. இனிமேல் மாணவர்கள் தமது லீவை நீடிக்க விண்ணப்பித்தால், பல்கலைக் கழக மான்யங்கள் குழுவைக்கலந்து ஆலோசித்து லீவை வழங்குமாறு பீடாதிபதிகள் பணிக்கப்பட்டுள்ளனர்.

# முடிவை மறுபரிசீலனை செய்க ஜெயலலிதாவிடம் கோரிக்கை

## காங்கிரஸ் அமைச்சர்கள் விடுத்தனர்

(டில்லி)

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நான்கு சிரேஷ்ட அமைச்சர்கள் தமிழக முதல்வர் ஜெயலலிதா கூட்டணி உறவு குறித்து தமது முடிவை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னையில் இருந்து வெளியாகும் இந்துப் பத்திரிகையில் முன்பக்கத் தலைப்புச் செய்தியாக இது வெளிவந்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கையில் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது காங்கிரஸ் கட்சியின் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களுக்கு அ. இ. அ. தி. மு. க ஆதரவளிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஹிந்துஸ்தான் ரைம்ஸ் செய்தியில் அரசாங்கம் அ. இ. அ. தி. மு. கவின் ஆதரவை நாடி நிற்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் டில்லியில் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர்தயாள்சர்மாவைசந்தித்துப் பேசிய அ. இ. அ. தி.மு கவின் பி. ஜீ. நாராயணன் தலைமையிலான குழு நரசிம்மராவ் அமைச்சரவைக்கான தமது ஆதரவை மீளப்பெறுவதாகக் கூறும் கடிதமொன்றைக் கையளித்துள்ளது.

---

யாழ்.
மிட்ரவுண் றோட்டறக்ற் கழகம்
நடாத்திய

### தமிழர் பண்பாட்டு கோலப் போட்டி பரிசளிப்பு விழா

இடம்:- நல்லூர் ''கம்பன் கோட்டம்''
காலம்:- (இன்று) வெள்ளிக்கிழமை
நேரம்:- மாலை 4.00 மணி
பிரதம விருந்தினர்:- திரு. து. வைத்திலிங்கம் (Deputy District Commissioner)
சிறப்பு விருந்தினர்:- Rtn. திரு. என், ராஜேந்திரம் (Manager Hatton National Bank)

பரிசில் விபரம்

பாடசாலைப் பிரிவில்:
1-ம் இடம் - செல்வி பா துஷ்யந்தி
அன்பளிப்பு:- ரூபா ஆயிரம் லிங்கம் கூல்பார்
2-ம் இடம் - செல்வி ம. ராஜினி
3-ம் இடம் - செல்வி தே. முருகரம்யா
செல்வன் ம. கிருஷ்ணகுமார்

தனியார் பிரிவில்
1-ம் இடம் - செல்வி வே. ரூபஜெனனீ
அன்பளிப்பு:- ரூபா ஆயிரம் சுமங்கலி ஜுவலர்ஸ்
2-ம் இடம் - செல்வி த. அமுதா
3-ம் இடம் - செல்வி கை. சுஜிதா
அன்பளிப்பு:- ரூபா ஐந்நூறு சியாமளா நகைமாளிகை

-போட்டிக் குழு

விளம்பர அன்பளிப்பு:
1) கல்யாணி கிறீம் ஹவுஸ், 73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
2) ஜெயா அழகுசாதன மாளிகை 177A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
கிளை: ரேகா பன்சி குட்ஸ், 25,45, பெரியகடை, யாழ்ப்பாணம்
3) ராஜா கிறீம் ஹவுஸ், 36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(4456)

---

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்கள் ஒன்றிணைந்து நடத்தும் நீகன் நகர் கப்டன் ஜிம்கலி சனசமூக நிலைய வளர்ச்சிக்காக

தமிழோசை புகழ்
அருணா இசைக் குழுவினர் வழங்கும்

### இனிக்கும் இதயகானங்கள்

(இசை நிகழ்ச்சி)

இடம்: வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய அரங்கு
காலம்: 14-03-1993 (ஞாயிறு)
காட்சிகள்: பி. ப. 2-30 மாலை 6-00 மணி

விளம்பர அன்பளிப்பு:-
அழகிய தங்க நகைகளுக்கு நாடவேண்டிய இடம்:
**அருணா நகை மாளிகை**
177B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-6182)

---

தமிழக காங்கிரஸ் தலைவர்கள்

# தி. மு. கவுடன் உறவை வலுப்படுத்த விருப்பம்

எதிர்காலத்தில் தி. மு. கவுடன் உறவை வலுப்படுத்துவதென தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்திரங்கராஜன், குமாரமங்களம் மற்றும் மு. அருணாசலம் ஆகியோர் கையொப்பமிட்டு மகஜர் ஒன்றை நேற்று வெளியிட்டனர்.

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்திராகாங்கிரசுடனான உறவை முறித்துக் கொண்டதையடுத்தே இந்திரா காங்கிரஸ் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் உறவை ஏற்படுத்தும் என காங்கிரஸ் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தின் இரு சபைகளையும் சேர்ந்த இருபது இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் நேற்று டில்லியில் கூடி இதுபற்றி விவாதித்த பின்னரே மேற்படி மகஜரை வெளியிட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

---

## மெய்வல்லுநர் போட்டி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளி பிற்பகல் 1-30 மணிக்கு நடைபெறவுள்ளது. மேற்படி பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ள மெய்வல்லுநர் போட்டியில் யாழ். கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை தியாகராசா பிரதம விருந்தினராகவும் ஓய்வுபெற்ற உடற் கல்விப் பணிப்பாளர் திரு. க. நாகமணி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்,

---

# காங்கிரசுடன் கூட்டு தி. மு. க. சேராது

## கருணாநிதி அறிவிப்பு

(சென்னை)

சென்னையில் எதிர்வரும் 21 ஆம் திகதி பாரதீய ஜனதா கட்சி நடத்த திட்டமிட்டுள்ள பேரணிக்கு அ தி. மு. க. அனைத்து உதவிகளையும் வழங்கிவருவதால் இப்பேரணியால் விபரீத விளைவுகள் ஏற்படவுள்ளது என தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி எச்சரித்துள்ளார்.

நேற்று கோயம்புத்தூரில் செய்தியாளர்களிடையே பேசிய அவர், மதவாதம் ஊடுருவாமல் தடுக்கும் பொறுப்பு தமிழகத்திலுள்ள மற்ற கட்சிகளுக்கும் உண்டு என்றார்.

இதேவேளை தி. மு. கவிற்கும் இந்திரா காங்கிரசிற்கும் இடையில்எந்தக் கூட்டும் மேற்கொள்ளப்படமாட்டாது என மு. கருணாநிதி நேற்று திட்டவட்டமாக அறிவித்தார்.

---

தெரிவுக்

கள் அடிப்படையில் மொழிவாரியானவை. இங்கு மொழிவாரி மாநிலங்கள் உருவாக சம்மதிக்க மாட்டார்கள். அத்துடன் இங்கு சட்டம்ஒழுங்கு, காணி, காணிபகிர்வு குறித்த அதிகாரங்களும் மத்திய அரசிடமேகுவிந்துள்ளது என றார்.

எம்மால்எமதுபிரச்சினையை தீர்த்துக் கொள்ள முடியும்என ஜனாதிபதி பிரேமதாசா அண்மையில் பி. பி. ஸி. பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் பிரச்சினையை தீர்க்கும் ஆற்றலும் பக்குவமும் உள்ள தலைவர்கள் இந்நாட்டில் இல்லை என்றே தோன்றுகின்றது. இவ்வாறு தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கைகுறித்து பி. பி. ஸிக்கு கருத்து தெரிவித்த எம் பி யான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நாட்டின் பிரச்சினையை தீர்க்க சர்வதேச நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்த வேண்டும் என்பதையேதற்போதையநிலவரம் வற்புறுத்துகின்றது என்றும் அவர்கூறினார்.

---

மட்டக்களப்பு

றிய இராணுவத்தினர் பெரிய மியாங் குளம் பகுதியின் ஊடாக முன்னேறி வந்து 9 ஆம் கட்டை என்னும் இடத்திலும் தரித்து நிற்கின்றனர்.

இந்த அணிகளுக்கு உதவியாக இரண்டு குண்டு வீச்சு விமானங்களும், ஒரு புக்காரா விமானமும், ஓர் உலங்கு வானூர்தியும் தொடர்ந்து இருபதுக்கும் அதிகமான குண்டுகளை வீசியுள்ளன. தற்போது இராணுவத்தினர் நகராமல் மேற்குறிப்பிட்ட இடங்களிலேயே தரித்து நிற்கின்றனர்.

---

இன்று

யொட்டி வழங்கிய செய்தி இடம்பெறுகின்றது. கவிதைகளை புதுவை இரத்தினதுரை, கலையன், என். சண்முகலிங்கன், ஜெயா, தமிழவள் ஆகியோர் எழுதியுள்ளனர் இவற்றுடன் இரண்டு மொழிபெயர்ப்புக் கவிதைகளும் உள்ளன. பு. சத்தியமூர்த்தி, முல்லை யேசுதாசன், கிளிநொச்சி மூர்த்தி ஆகியோரின் சிறுகதைகளும், க. சிதம்பரநாதன், ப. புஸ்பரத்தினம், சொக்கன், சுடரவள், கருணாகரன் ஆகியோரின் கட்டுரைகளும், புதுநிலம் பகுதியும் இடம்பெறுகின்றன.

---

தபால்கள்

ஒன்றில் வடமாகாண வெளியூர்த் தபால்கள் உடைக்கப்பட்டு அனுப்பப்படுவது சம்பந்தமாகக் கேள்வி எழுப்பிய போதே கூட்டுப் படைகள் தலைமை அலுவலக அதிகாரிகளினால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

மேலும் கொழும்பில் வட பகுதிக்கான சுமார் 1600 க்கு மேற்பட்ட தபாற்பொதிகள் தேங்கிக் கிடப்பதாகவும், இதனைத் தொடர்ந்து நாளுக்கு நாள் தபாற்பொதிகளின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்துவருவதாகவும் தெரியவருகின்றது. (பா)

---

# முக்கிய அறிவித்தல்

## ஆண்டுவிழா பொதுக் கூட்டம் 12-03-1993

யாழ். மாவட்ட இறைச்சிக்கடை உரிமையாளர்களின் சமாசத்தின் ஆண்டுவிழா பொதுக்கூட்டம் 12-03-1993 வெள்ளிக்கிழமை (இன்று) முற்பகல் 10 00 மணியளவில் சின்னக்கடை இல.9 காரியாலயத்தில் நடைபெறும். சகல இறைச்சிக்கடை உரிமையாளர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தரும் வண்ணம் வேண்டுகிறோம்.

இக் கூட்டத்திற்கு விடுதலைப் புலிகள் அரசியல்துறை உறுப்பினர்களும், வேறு பல பிரமுகர்களும் சமுகம் அளிப்பார்கள்.

நன்றி

யாழ்ப்பாணம்

க. சி. கிருஷ்ணன்
(பபி) அற்புதராசா
செயலாளர்கள்

(4454)

---

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 11-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8559

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள் இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-2088, 28-6996, 40-7299, 24-5955, 42-9326,
26-2786, 28-1308, 26-1745, 26-9145, 24-4189,
26-8223, 28-2511, 24-3436, 24-5967, 26-0852,
27-5823, 41-5605, 40-2677, 27-7263, 27-9649

---

# மரண அறிவித்தல்

## கோவிந்தன் அரிதாஸ்

கிளிநொச்சியை பிறப்பிடமாகக்கொண்டவரும் திருவையாறு 3-ம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான கோவிந்தன் அரிதாஸ் அவர்கள் 9-3-93 அன்று காலமானார். அன்னார் நவமணியின் அன்புக் கணவரும், பிரியன், சந்திரவதனி, பிரியதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 12-3-93 கிளி/திருவையாறு இந்து மயானத்தில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

30/3, அருள் வீதி,
திருவையாறு,
கிளிநொச்சி.

தகவல்:
மகன் பிரியன்

[4453]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.